உமாபதி சிவாசாரியரின்

# திருவருட்பயன்

நா. பாஸ்கரன்

சைவசித்தாந்தத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறை
வெளியீடு – 2

---

டாக்டர் நா. பாஸ்கரன்

---

## உமாபதி சிவாசாரியரின்
# திருவருட்பயன்

உமாபதி சிவாசாரியரின்

# திருவருட்பயன்

நா. பாஸ்கரன்

சைவசித்தாந்தத் துறை

சென்னைப் பல்கலைக் கழகம்

முதற் பதிப்பு : 1994

உரிமம் : சென்னைப் பல்கலைக்கழகம்

விலை : ரூ. 28-00

இந்த நூலைப் பற்றிய வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகிறது.

இயக்குநர்,
பதிப்புத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

அச்சிட்டோர் : நளந்தா ஆர்ட் பிரிண்டர்ஸ்
356. லாயிட்ஸ் சாலை, சென்னை-600 005



## காணிக்கை

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சங்கராச்சார்ய மகாசுவாமிகள்
திருவடிகளுக்கு

உ

சிவமயம்

# மதிப்புரை

தருமையாதீனப்புலவர், முதுபெரும்புலவர்,
திருமுறை உரைமணி, சைவப் பேரறிஞர்,
தமிழ்ப் பேரவைச் செம்மல், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான் ,
டாக்டர் சி. அருணைவடிவேலு முதலியார்

---

நாட்டில் உயர் கல்வியையும், ஆராய்ச்சி அறிவையும் வளர்ப்பன பல்கலைக் கழகங்கள். தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் உள்ள பல்கலைக் கழகம் 136 ஆண்டுகட்கு மேலான பழமையை உடையது. இதில் பல்வேறு கலைகட்கும் தனித் தனித் துறைகள் உண்டு. அவைகளில் தத்துவத் துறை ஒன்று. எனினும் நீண்ட நெடுங்காலமாக இது பலவகைத் தத்துவங்கட்கும் பொதுவானதாகவே இருந்து வந்துள்ளது. அண்மையில் இதினின்றும் தமிழர் மெய்யியலாம் சைவ சித்தாந்தம் தனி ஒரு துறையாக ஆகி இயங்கி வருதல் மகிழ்ச்சிக்கும், பாராட்டுதலுக்கும் உரியது.

இத்துறையில் இதுபொழுது இணைப் பேராசிரியராக இருந்து பணியாற்றி வருபவர் முனைவர் நா.பாஸ்கரன் அவர்கள். இவர் இத்துறை பலருக்கும் பயன் தந்து சிறக்கும் முறையில் மிக்க ஊக்கங்கொண்டு செயலாற்றி வருதல் இதன் நிகழ்ச்சிகள் பலவற்றால் நன்கு விளங்குகின்றது.

திரு. பாஸ்கரன் அவர்கள் இதுபொழுது சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் முதற்கண் பயிலப் பெறுவதாக அமைந்துள்ள "திருவருட் பயன்" என்னும் நூலுக்குப் புதிய உரை ஒன்றை எழுதி வெளியிட முற்பட்டிருப்பது தம் துறையின் முன்னேற்றத்தில் இவருக்கு உள்ள ஆழ்ந்த பற்றினையே விளக்குகின்றது.

"திருவருட்பயன்" நூலுக்குப் பழமையாகவே வெளிவந்து உலவும் உரைகள் பல உள்ளன. நான் எழுதிய பொழிப்புரை அகல உரைகளும் உள. எனினும் 'சைவ சித்தாந்த உண்மைகளை அத்தத்துவத்தில் தொடக்க நிலையில் உள்ளவர்கள் முதற்கண் எளிதில் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்'- என்னும் நோக்கத்தோடு குறள் வெண்பா நூற்றில் அவ்வுண்மைகளைத்

தொகுப்பாகக் கூறுகின்ற இந்நூலுக்கு, அந்நோக்கத்தின் படியே அமைந்த எளிய உரை ஒன்று வேண்டும் என்னும் கருத்தினால் முனைவர் பாஸ்கரன் அவர்கள் அத்தகைய புதிய உரை ஒன்றைத் தாமே எழுதி வெளியிடுகின்றார்கள். இவ்வுரையை வெளி யிடுவதற்கான இவர்களது நோக்கம் நல்ல ஒரு நோக்கம். எனவே இதற்கு ஆவன புரிதல் நல்லோர் கடனாகும்.

இவ்வுரையின் ஆசிரியராகிய இவர் தமது நோக்கத்திற்கு ஏற்பச் செய்யுட்களின் சொற்பொருளை விளக்கும் முயற்சியில் பெரும்பான்மையாக ஈடுபடாமல், கருத்தை விளக்குதலிலே ஈடுபட்டிருத்தலை இவ்வுரையை நோக்குபவர் எளிதில் உணர்வர்.

சில குறள்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைக் கொள்ள உரியனவாய் இருத்தலை அவ்விடங்களில் காட்டியுள்ளார்.

ஒரு நூலுக்கு எழுதப்படும் பல உரைகளுக்கு இடையே சிற்சில கருத்து வேற்றுமைகள் இருத்தல் எங்கும் தவிர்க்க முடியாத ஒன்று. அவ்வாறான சில வேறுபாடுகளை இவ்வுரையிலும் காணலாம்.

'புத்துரை'- என்பதற்கு ஏற்ப இரண்டோர் இடங்களில் ஆசிரியர் புதிய பொருள்களைக் கூறியுள்ளார்.

பல இடங்களில் பாட்டின் பொருளோடு, மாணாக்கர் அது தொடர்பாக அறிய வேண்டிய உண்மைகளையும் ஆங்காங்குக் கூறியிருக்கின்றார்.

தொடக்கத்தில் நூலாசிரியரான உமாபதி தேவரது வரலாற்றுச் சுருக்கத்தினையும் இவர் தந்திருப்பது இவ்வுரைக்கு நிறைவைத் தருகின்றது.

இன்ன பல காரணங்களால் இப்புத்துரை பலர்க்கும் பயன் தருவதாகும். அங்ஙனம் பயன்தர இறையருள் துணை புரிவதாக. நலம்.

இங்ஙனம்

**சி. அருணைவடிவேலு முதலியார்**

15.10.1993
காஞ்சிபுரம்

# பாராட்டுரை

**கருப்பையா**
**மூத்த பத்திரிக்கையாளர்,**
**செயலாளர், சைவசித்தாந்த**
**ஆய்வு நிறுவனம்.**

1076. 19வது பிரதான சாலை
அண்ணாநகர் மேற்கு
சென்னை.40

---

1983ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 20ம் தேதி முதல் 23ம் தேதி வரையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 125வது ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவையொட்டிச் சமயங்கள், சிந்தனைகள் வளர்ச்சிக்காகப் புதிதாகச் சில துறைகளைச் சென்னைப்பல்கலைக்கழகத்தில் தொடங்க வேண்டும் என்ற கருத்தை 125வது ஆண்டுவிழாக் குழுக்கூட்டம் ஒன்றில் நான் வெளியிட்டேன். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அப்போது துணைவேந்தராக இருந்த பேரறிஞர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்களும் பிறரும் அந்தக் கருத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

அதைத்தொடர்ந்து, மாண்பமை நீதிபதி திருமிகு பு.ரா.கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நாங்கள் சிலர் இந்தக் கருத்தைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டோம். அதன் விளைவாகச் சைவம், வைணவம், ஜைனம், இஸ்லாம், கிறித்துவம் ஆகிய சமயநெறிகளுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தனித்தனியாகத் துறைகள் தொடங்கப்பெற்றன.

1986ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத் துறை தனியொரு துறையாக இயங்கிவருகிறது. சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் முயற்சிகள் மூலமாகச் சென்னைப் பல்கலைக்கழகம் பெற்ற நன்கொடைகள் ஓர் அறக்கட்டளையாக அமைக்கப்பட்டு, அந்த மூலதனத்திற்குக் கிடைக்கும் வட்டித் தொகை வருவாய் மட்டுமே சைவசித்தாந்தத் துறையை நிர்வகிக்கவும், நடத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தத்துறை எவ்வாறு இயங்க வேண்டும் என்பது குறித்துச் சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்திற்கும் சென்னைப்பல்கலைக்கழகத்திற்கும் இடையே ஓர் ஒப்பந்தம் 17.9.1983 அன்று கையெழுத்தாகியது. சைவ சித்தாந்தத்தின் ஒவ்வொரு கூறு சம்பந்தமாகவும் அறிவியல் அடிப்படையில் ஆய்வும், கல்வியும் இந்தச் சைவசித்தாந்தத் துறை மூலம் அளிக்கப் பெற வேண்டும் என்பது சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் அடிப்படை நோக்கம்.

மேலே குறிப்பிடப்பெற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தத் துறை இயங்கவேண்டும் என்று சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம் ஒல்லும் வகையிலெல்லாம் முயன்று வருகிறது.

1986ம் ஆண்டில் சைவசித்தாந்தத்துறை தொடங்கப் பெற்ற பிறகு, 1993ம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரையில் ஒரே ஒரு நூல் மட்டுமே சைவசித்தாந்தத்துறையின் வெளியீடாக வந்துள்ளது. 1993ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் முனைவர் நா.பாஸ்கரன் அவர்கள் சைவ சித்தாந்தத் துறையின் ரீடராகவும் தலைவராகவும் நியமிக்கப் பெற்றார்.

முனைவர் நா.பாஸ்கரன் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, பதினைந்து மாதக் காலத்தில் சைவசித்தாந்தத்துறையின் இரண்டாவது நூலும், மூன்றாவது நூலும் தயாராகி இப்போது வெளியிடப்பட வருகின்றன என்பதை அறிந்து சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது.

தில்லைவாழ்அந்தணர் மரபினரான உமாபதி சிவாசாரியர் பல அரிய நூல்களைத் தமிழிலும், வடமொழியிலும் வழங்கி அருளியிருக்கிறார். அவற்றில் "திருவருட்பயன்" என்னும் நூலுக்குப் புதிய ஓர் உரையை முனைவர் நா.பாஸ்கரன் அவர்கள் எழுதியிருக்கிறார். இந்நூல் சைவசித்தாந்த மாணவர்களுக்குப் பயன்தரும்.

இந்தச் சிறந்த நூலை எழுதியுள்ள முனைவர் நா.பாஸ்கரன் அவர்களுக்கும், இதனை வெளியிடுவதற்கு உரிய ஆக்கமும், ஊக்கமும் அளித்திருக்கின்ற சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் பேராசிரியர் முனைவர் பேரா. கோவிந்த ராஜுலு அவர்களுக்கும், பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவினருக்கும் சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் சார்பில் பாராட்டையும் நன்றியையும் உரித்தாக்குகின்றேன்.

25.4.1994 — கருப்பையா
சென்னை.

# முன்னுரை

சென்னைப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத்துறையின் வெளியீட்டு வரிசையில் இரண்டாவதாக இந்நூல் வெளிவருகின்றது. சைவசித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கு. இச்சாத்திரங்கள் பதினான்கையும் கற்றோரும், மற்றோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சந்தி பிரித்து முதல் வெளியீடாக 1988ஆம் ஆண்டு இத்துறை வெளியிட்டுள்ளது. அதனையடுத்து சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் புரிந்துகொள்ள முதற்கண் கற்றுணரப் பெறுவதாக அமைந்துள்ள உமாபதி சிவாசாரியரின் திருவருட்பயனுக்கு எளிய புத்துரை ஒன்றை எழுதி தற்போது வெளியிடுகின்றது.

இத்துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் நல்கி வரும் சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் டாக்டர் பேரா. கோவிந்தராஜுலு அவர்கட்கும், ஆட்சிமன்றக் குழு அமைப்பாளர் திருமிகு. V.V. நாதன் அவர்கட்கும், மற்றும் ஆட்சிமன்றக்குழு உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலுக்குச் சிறந்ததொரு மதிப்புரையை வழங்கிச் சிறப்பித்துள்ள சைவப் பேரறிஞர், முதுபெரும்புலவர் டாக்டர் சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கட்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சைவசித்தாந்தத்துறை சிறந்து விளங்க ஒல்லும் வகையிலெல்லாம் உதவி செய்து வருபவர் சைவசித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் செயலாளர், மூத்தபத்திரிகையாளர், கலைமாமணி திருமிகு கருப்பையா அவர்கள். இந்நூலுக்கு இனிய பாரட்டுரையினை வழங்கிப் பெருமை சேர்த்தமைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை அவர்கட்கு உரித்தாக்குகின்றேன்.

இந்நூலினைக் குறுகியகாலத்தில் வெளியிடுவதற்கு முன்வந்த பல்கலைக்கழகப் பதிப்புத்துறைக்கும், மிகச் சிறப்பாக அச்சிட்டுதவிய நலந்தா அச்சகத்தார்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

18.4.1994 **நா.பாஸ்கரன்**

சென்னை

## வரலாறு

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் சமயம் சைவம். இது கடவுள், உயிர்கள், உலகம் என்னும் முப்பொருள் உண்மையை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டது.

முப்பொருள் உண்மையை ஆராயும் அறிவும், சிவலிங்க வழிபாடும் சங்க காலத்திற்கு முன்பே தோன்றி வளர்ந்திருப்பினும் அவை முறைப்படுத்தப்பட்ட காலம் கி.பி. 12 முதல் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலமாகும். இக் காலகட்டத்தில் தோன்றியவைதாம் சைவசித்தாந்தச் சாத்திரங்கள் எனப்படும் மெய்கண்ட சாத்திரங்கள்.

### சைவ ஆசாரியர்கள்

சைவஆசாரியர்கள் - சமயஆசாரியர்கள், சந்தான ஆசாரியர்கள் என இருவகைப்படுவர்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சமயாசாரியர்கள். தேவாரம், திருவாசகம் ஆகிய அருள் நூல்கள் இவர்கள் அருளியவை. இவை தோத்திர நூல்கள் வரிசையில் இடம்பெறுவன.

மெய்கண்ட தேவர், அருணந்திசிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாசாரியர் ஆகிய நால்வரும் சந்தானாசாரியர்கள். இவர்கள் சைவ சமயத்திற்கு வலுவான தத்துவ அடிப்படையை நெறிப்படுத்தினர் என்றால் அது மிகையாகாது. இவர்கள் அருளிய நூல்கள் சாத்திர நூல்கள் வரிசையில் இடம் பெறுவன. இச் சாத்திர நூல்களை மெய்கண்ட சாத்திரங்கள் என அழைப்பது மரபு.

### மெய்கண்ட சாத்திரங்கள்

சைவ சமய தத்துவத்தை விளக்குவன மெய்கண்ட சாத்திரங்கள். இம் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்காகும். அவையாவன.

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞானசித்தியார்
5. இருபா இருபஃது

6. உண்மை விளக்கம்

7. சிவப்பிரகாசம்

8. திருவருட்பயன்

9. வினா வெண்பா

10. போற்றிப்பஃறொடை

11. கொடிக்கவி

12. நெஞ்சுவிடுதூது

13. உண்மைநெறி விளக்கம்

14. சங்கற்ப நிராகரணம்

இவற்றுள் திருவுந்தியார் என்னும் நூல் திருவியலூர் உய்யவந்ததேவநாயனாரால் அருளப்பட்டது. திருக்களிற்றுப் படியார் என்னும் நூல் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரால் அருளப்பட்டது. சிவஞானபோதம் மெய்கண்ட தேவர் அருளியது. சிவஞானசித்தியார், இருபாஇருபஃது ஆகிய இரண்டு நூல் களையும் அருளியவர் அருணந்தி சிவாசாரியர். திருவதிகை மனவாசகங்கடந்த நாயனாரால் அருளிச் செய்யப்பட்டது உண்மை விளக்கம் என்னும் நூல்.

## திருவருட்பயன்

மேற்கூறிய ஆறு நூல்களை விடுத்து பதினான்கு நூல்களுள் மீதமுள்ள எட்டுநூல்களையும் அருளியவர் உமாபதி சிவாசாரியர் ஆவார். அவற்றுள் ஒன்று திருவருட்பயன்.

வள்ளுவரின் குறளில் முப்பால்களே இடம்பெற்றன. விடுபட்ட வீட்டுப் பாலை குறள் வெண்பாவினால் விளக்கிய பெருமை உமாபதி சிவாசாரியரையே சாரும்.

திருவருளை ஆய்ந்து அதன் பயனை விளங்கக் கூறுவதால் இந்நூல் திருவருட்பயன் என்பதாயிற்று. பத்து அதிகாரங்களாகவும், அதிகாரத்திற்குப் பத்துக் குறள் வீதம் இந்நூலை வகுத்துள்ளார் ஆசிரியர். கடவுள் வாழ்த்து ஒரு குறள். மொத்தம் நூற்றியோரு குறள் வெண்பாக்களையுடையது திருவருட் பயன். பத்து அதிகாரங்களில் முதல் ஐந்து அதிகாரங்களைப் பொது எனவும், பின்னைய ஐந்து அதிகாரங்களைச் சிறப் பெனவும் கூறுவர்.

இந்நூல் கூறும் பத்து அதிகாரங்கள் முறையே

1. பதிமுது நிலை

2. உயிரவை நிலை

3. இருள்மல நிலை

4. அருளது நிலை

5. அருளுரு நிலை

6. அறியும் நெறி

7. உயிர் விளக்கம்

8. இன்புறு நிலை

9. ஐந்தெழுத்து அருள் நிலை

10. அணைந்தோர் தன்மை – ஆகும்.

**உமாபதிசிவாசாரியர்**

"கோயில்" என்று கொண்டாடப்படும் சிதம்பரத்தில் தில்லைவாழந்தணர் மரபில் உமாபதிசிவாசாரியர் தோன்றினார். இவர் திறம் வியந்த சோழ அரசன் இவர்க்கு முத்துச்சிவிகை மேளவாத்தியம், பகல்தீவர்த்தி முதலிய விருதுகளை அளித்திருந்தான்.

ஒரு நாள் கோயிற் பூசையை முடித்து, சிவிகையூர்ந்து தீவர்த்திகள் உடன்வர திருவீதியில் வந்து கொண்டிருந்தார் உமாபதி சிவாசாரியர். அப்பொழுது மாணவர்கட்குப் பாடம் போதித்துக் கொண்டிருந்த மறைஞான சம்பந்தர் உமாபதியாரின் காதில் விழும் வண்ணம் "பட்ட கட்டையில் பகற் குருடேகுதல் பாரீர்" என்று உரைத்தார். இதைக் கேட்டவுடன் உமாபதியார் உடனே சிவிகையினின்று இறங்கி மறைஞான சம்பந்தரை தம் குருவாக ஏற்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

"பட்டகட்டை" என்பது சிவிகையையும். "பகற்குருடு" என்பது பகலில் தீவர்த்தியுடன் செல்வதையும் குறிக்கும்.

நெசவு நூலின் பாவுக்கு இட்ட கூழின் மிச்சத்தை நெசவாளர் ஒருவர் ஊற்ற அதை மறைஞானசம்பந்தர் தம் கைகளில் வாங்கி "சிவப்பிரசாதம்" என்று சொல்லி உண்டார். அவர் கைகளிலிருந்து ஒழுகிய எச்சிற் கஞ்சியை உமாபதியார் "குருப்பிரசாதம்" என்று சொல்லித் தம் கைகளில் ஏந்தியுண்டார். உமாபதியாரின் பக்குவத்தைக் கண்ட மறைஞானசம்பந்தர் அவரைத் தம் மாணாக்கராக ஏற்றுக் கொண்டார். இதையறிந்த ஏனைத் தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதியாரைக் குலமுறை

பிறழ்ந்தவராகக் கொண்டு தில்லை நடராசப் பெருமானுக்குப் பூசை செய்யத் தகுதியற்றவரென்று ஒதுக்கிவிட்டனர். அதனால் தில்லைக்குக் கிழக்கே உள்ள 'கொற்றவன்குடி' என்னும் ஊரில் மடம் அமைத்துக் கொண்டு உமாபதியார் வாழ்ந்தார் . இதனால் இவரை கொற்றவன்குடி உமாபதிதேவ நாயனார் எனவும் வழங்குவர்.

உமாபதிசிவாசாரியர் 1) சிவப்பிரகாசம் 2)திருவருட்பயன் 3) வினாவெண்பா 4) போற்றிப்பஃறொடை 5) கொடிக்கவி 6) நெஞ்சுவிடுதூது 7) உண்மைநெறிவிளக்கம் 8) சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு ஞானசாத்திரங்களை ஆக்கி அருளினார். இந்த எட்டு நூல்களைச் 'சித்தாந்த அட்டகம்' என அறிஞர் வழங்குவர்.

வடமொழியிலும் பவுட்கரம் என்னும் உபாகமத்திற்கு விருத்தியுரையும் "சதரத்ன சங்கிரகம்" என்னும் ஆகமசார நூலையும் செய்துள்ளார்.

திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் நாயனார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், கோயிற்புராணம் ஆகிய நூல்களும் உமாபதியார் அருளியவையே. எனினும் இவை களைச் செய்த உமாபதி தேவர் வேறாக இருக்கலாம் என்பது சிலரது கொள்கை.

பெத்தான் சாம்பான் என்னும் பக்தனிடம் சிவபெருமான்

**அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதிய கைச்சீட்டு - படியின் மிசைப்**
**பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத்தீக்கை செய்து**
**முத்தி கொடுக்க முறை.**

என்னும் பாடலை எழுதி இக்கைச் சீட்டை உமாபதியாரிடம் சேர்பிக்கச் சொல்லி மறைந்தார். கைச்சீட்டைக் கண்ணுற்ற உமாபதி சிவாசாரியர் இறைவனின் பெருங்கருணையை வியந்து அவன் ஆணையின் வண்ணம் சாம்பானுக்குத் தீக்கை செய்து சுத்தாத்துவித முத்திப் பேற்றை வழங்கினார். இது உணராத சாம்பானது மனைவியும், சுற்றமும் அரசனிடம் முறையிட, சாம்பானது மனைவியும், அரசனும் காண ஒரு முள்ளிச் செடிக்கும் உமாபதிசிவாசாரியர் முத்தி கொடுத்தார்.

தில்லைவாழ் அந்தணர்களது முறைப்படி ஒரு நாள் உமாபதிதேவர்க்கு உரிய பூசைமுறை வந்தது. மாணவர் புடைசூழப் பொன்னம்பலம் வந்தார் உமாபதிதேவர். ஆங்குள்ள அந்தணர் உமாபதியார் வரக்கூடாது என்று மறுத்துவிட்டனர்.

வேறு ஒருவரை அன்று பூசைசெய்ய ஏற்பாடு செய்தனர். ஆயினும் முதற்கண் பூசிக்கப் படுகின்ற "திருச்சிற்றம்பலம்" உடையார் என்னும் "படிகலிங்கம்" அஃது இருந்த வெள்ளிப் பேழையுடன் காணப்படவில்லை. அந்தணர் பலரும் பெரும் துன்பம் உற்ற பொழுது "பூசைமுறையாளனாகிய உமாபதி சிவத்தினிடம் நாம் அமர்ந்திருக்கின்றோம்" என்று ஓர் அசரீரி ஒலித்தது. அந்தணர்கள் திடுக்கிட்டுக் கொற்றவன் குடிக்குச் சென்று உமாபதிதேவரை வணங்கி அழைக்க, அவர் இலிங்கத்துடன் வந்து கோயிலுள் நுழைந்து முறைப்படி பூசை செய்தார் என்கின்ற வரலாறும் சொல்லப்படுகின்றது.

உமாபதிசிவாசாரியரை ஒதுக்கிவைத்துக் கோயில் பெருவிழா நடத்தக் கொடியேற்றத் தில்லைவாழ்அந்தணர்கள் முற்பட்டபோது கொடி ஏறாது நின்றது. தில்லைவாழ்அந்தணர் தம் தவற்றை உணர்ந்து உமாபதிசிவாசாரியரைஅடைந்து வேண்ட, அவர் கோயிலுக்கு வந்து 'கொடிக்கவி' என்னும் நூலை இயற்றிக் கொடியேற்றப் பின்பு திருவிழாச் சிறந்தது.

உமாபதிசிவாசாரியார் காலத்தை அவரே சங்கற்ப நிராகரண நூலில்

**ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்**
**வாழும் நற் சகனம் மருவா நிற்ப**

எனக் கூறியுள்ளார்.

**சகனம் - சாலிவாகன சகாப்தம்**

**ஏழஞ்சு - 35 + 200 + 1000 = 1235.**

சாலிவாகன சகாப்தத்துடன் 78 - ஐக் கூட்டினால் கிறித்து சகாப்தம் கிடைக்கும் .

**1235 + 78 = 1313.**

எனவே கி.பி 1313இல் சங்கற்ப நிராகரணம் இயற்றப் பட்டது. இவர் ஒரு சித்திரை மாதத்து அத்த நட்சத்திரத்தில் முத்தியடைந்திருக்கிறார்.

"அருளே உலகெலாம் ஆள்விப்ப[து], ஈசன்
அருளே பிறப்பறுப்பது: ஆனால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன், எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ[து] எனக்கு"

-அற்புதத் திருவந்தாதி

உமாபதி சிவாசாரியரின்

# திருவருட்பயன்

## புத்துரை

### கணபதி வணக்கம்

**நற்குஞ் சரக்கன்று நண்ணில் கலைஞானம்**
**கற்கும் சரக்கன்று காண்.**

நாடுவோர்க்கெல்லாம் நலமே அருளும் யானை முகத்தினையுடைய கணபதியை வணங்கினால் வருந்திக் கற்கினும் உணர்தற்கரிய கலைஞானம் ஒருவர்க்கு எளிதில் தானே விளங்கும்.

யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் என்பர். ஆனால் இந்த யானை முகத்தானோ நாடுவோர்க்கெல்லாம் நலமே அருள்வதால் 'நற்குஞ்சரக் கன்று' எனச் சிறப்பாகக் குறிக்கப் பெறுகிறார்.

தன்னைச் சார்ந்தோர் தன் கால் வழியே மேல் ஏறிப்பிடரியில் அமர இடங்கொடுத்தல் யானையின் சிறப்பியல்பு. இத்தன்மையதனால் நற்குஞ்சரக் கன்று எனப் போற்றப் பெறுகிறார் எனவும் கொள்ளலாம்.

இடர்களை நீக்கி வெற்றிக்கு அருளும் தெய்வம் கணபதி. இடர்கடி கணபதி.

வருந்திக் கற்றும் உணர்வதற்கு அரிதாகிய கலைஞானம் (மெய்ப்பொருள் உண்மை) கணபதியை வணங்கினால் ஒருவர்க்கு எளிதில் கைகூடும் என்பது கருத்து.

## 1. பதிமுது நிலை

இறைவனது முதுமையான நிலையையும், அவனது மேலான பொது இயல்புகளையும் விவரிக்கும் அதிகாரம் பதிமுதுநிலை அதிகாரம்.

**1. அகர உயிர்போல் அறிவாகி எங்கும்**
**நிகரில்இறை நிற்கும் நிறைந்து.**

எழுத்துக்களில் முதல் எழுத்து அகரம். அதுபோல இறைவனும் உலகு, உயிர் அனைத்திற்கும் முதல்வன்.

வெளிமுயற்சிகளுள் வாயைத் திறத்தல் என்ற ஒரு செயலிலேயே பிறப்பது அகரம். "அங்காத்தல் அ". மற்ற எழுத்துக்கள் அவ்வாறு இல்லை. வாயைத்திறப்பதோடு வேறு வெளிமுயற்சிகளையும் தொடர்ந்தே பிறப்பன. அதனால் அகரவொலி எல்லா எழுத்துக்களிலும் இரண்டறக் கலந்துள்ள தாம். ஆயினும் தனி அகரம் வேறு உள்ளது. அது போல இறைவனும் அனைத்திலும் கலந்தும், கடந்தும் உள்ளான்.

எந்த எழுத்தொலியும் வாயைத் திறவாமல் பிறக்காது. வாயைத்திறந்தவுடன் உண்டாகும் "அ" என்ற ஒலியில்லாமல் எழுத்துக்கள் ஒன்றும் தோன்றமாட்டா. அது போல இறைவனின்றி உலகங்களும், உயிர்களும் தோன்ற வாய்ப்பில்லை.

அகரம் இல்லையாயின் ஏனைய எழுத்துக்கள் இல்லை. அதுபோல இறைவன் இல்லையாயின் வேறெந்தப் பொருளின் இருப்பும் இல்லையாம்.

**2. தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சத்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்.**

மன்னுயிர்களை இறை நிலையாகிய சச்சிதானந்த நிலைக்கு உயர்த்த வல்ல ஒரே ஆற்றல் இறைவனது திருவருளாற்றல். அத்திருவருளாற்றலோடு என்றும் வேறாகாதவன் எங்கள் இறைவன்.

திருவருளாற்றல் ஒன்றே. அதுவே ஐந்தொழிலும் செய்வது. அவை 1. படைத்தல் 2. காத்தல் 3. அழித்தல் 4. மறைத்தல் 5. அருளல்.

தீயின் சூடு ஒன்றுதான். ஆனால் அது செய்யும் தொழில்கள் பல. தீயின் சூடு சுடுதல், அவித்தல், பொரித்தல், வறுத்தல் முதலிய பல தொழில்களைச் செய்தும் மாறுதல் அடைவதில்லை. அதேபோல் இறைவனின் அருளாற்றல் ஐந்தொழில் செய்தும் மாறுதல் அடைவதில்லை. இவ்வருளாற்ற லோடு இறைவன் வேறாகாதவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

மேலும் இக் குறட்பா உபநிடதங்களின் சாந்தி மந்திரத்தை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

அது பூரணம். இது பூரணம். பூரணத்தினின்று பூரணம் தோன்றுகிறது. பூரணத்தினின்றும் பூரணத்தை அகற்றினும் எஞ்சுவது பூரணமே. ஓம் சாந்தி சாந்தி சாந்தி. இது உபநிடத சாந்தி மந்திரம்.

இக் குறட்பாவில் வந்துள்ள 'பின்னமிலான்' என்ற வார்த்தை இம் மந்திரத்தை நினைவுகொள்ளத் தூண்டுவதாக உள்ளது.

அறிவு அற்றதாகிய உலகு - மண். அறிவிக்க அறியும உயிர்கள். இவை தன் ஒப்பற்ற தன்மையை - சத்சித் ஆனந்த - நிலையை எய்த இறைவன் தன் பெருங் கருணையை, அருட்சக்தியை வாரிவாரிவழங்குகிறான். ஆயினும் அவனது அருட்சக்தி, அருளாற்றல் பின்னமின்றி, குறைவின்றி எப்பொழுதும் அவனைப்போன்றே பூரணமாய் விளங்குகின்றது. ஏனெனில் அவன் பூரணமானவன். பூரணத்திலிருந்து திருஅருளாகிய பூரணம் தோன்றுகிறது. பூரணத்திலிருந்து பூரணத்தை அகற்றினும் எஞ்சுவது பூரணமே. என்றும் பொருள்கொள்வது பொருத்தமாகவே இருக்கும்.

## 3. பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மை யான்.

பெருமைக்கும் - திருவருளாற்றலைக் கொண்டு ஐந்தொழில் புரியும் மகத்துவத்துக்கும், நுண்மைக்கும் - அனைத்திலும் கலந்தும் அனைத்தையும் கடந்தும் விளங்குவதால் நுண்மைக்கும், பேரருட்கும் - சர்வ ஆன்மாக்களையும் கடைத்தேற்ற

வேண்டும் எனும் உயிர்கள்பால் கொண்ட பெருங்கருணைக்கும், பேற்றின் அருமைக்கும் - நம் அறிவைக் கொண்டு நாம் அவனை அறிய இயலாமைக்கும் அவன் அருளின்றி அறிய இயலாதவன், அவன் திருவருளால் அவனை அடையச் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நான்மையிலும், சிவனடியார் திருத்தொண்டிலும் இடையறாது ஈடுபடுதல் வேண்டும். எனவே இறைவன் பேற்றின் அருமைக்கும் ஒப்பில்லாதவன் என்பதாம்.

### 4. ஆக்கி எவையும் அளித்(து)ஆ சுடன்அடங்கப் போக்கும்அவன் போகாப் புகல்.

எல்லா உலகங்களையும் படைத்து, படைத்தவற்றைக் காத்து மீண்டும் உயிர்கள் பிறக்கவும் உலகங்கள் தோன்றவும் ஏதுவாக மலமாகிய குற்றத்துடன் அவற்றை ஒடுக்குபவன். படைத்து, காத்து, ஒடுக்குவதால் அவனே எஞ்ஞான்றும் நீங்காத புகலிடமாவான்.

இதனால் அவனே முத்தொழிற்கும் உரியவன் என உணர்த்தப்படுகிறது. எனவே அவனே உயிர்களுக்குப் புகலிடம்.

### 5. அருவும் உருவும் அறிஞர்க்(கு) அறிவாம் உருவும் உடையான் உளன்.

அருவும் - நிட்களமான திருமேனி . அவை நான்கு 1. சிவம் 2. சக்தி 3. நாதம் 4. விந்து ஆகியன.உருவம் - சகளமான திருமேனி. அவை நான்கு . 1. மகேசன் 2. உருத்திரன் 3. மால் 4. அயன் ஆகிய நான்கு. அருவுருவமான திருமேனி – சதாசிவன். இவ் ஒன்பது திருமேனிக்கும் உயிராய் இருப்பவன் ஞானியருக்கு அறிவுக்கறிவாக விளங்கும் ஞான சொரூபமாயிருக்கும் இறைவன். மற்றையோர்க்கு அருவும் உருவும் அருவுருவமான வடிவங்களை உடையவனாக உள்ளான்.

### 6. பல்லார் உயிருணரும் பான்மையென மேல்ஒருவன் இல்லாதான் எங்கள் இறை.

உயிர்கள் அனைத்தும் தாமே உணரும் சக்தியற்றவை. கடவுள் அளித்த அக, புறக்கருவிகளைக் கொண்டு உணர்த்த உணரும் தன்மையன. எனவே உயிர்கள் இயல்பாகவே தமக்கொரு

தலைவனை உடையனவாயின. தலைவன் உணர்த்த அவன் தந்த கருவிகளைக் கொண்டுணரும் பான்மை உடையன உயிர்கள்.

இதைப் போன்ற இயல்புகள் இறைவனுக்கில்லை உணர்த்த ஒரு தலைவனோ, உணரக்கருவிகளோ இன்றி யாவற்றையும் தானே அறிபவன் அவன்.

எனவே இறைவன் தனக்கு மேலாக ஒன்றும் இல்லாதவன். தானே யாவர்க்கும் தலைவனாக விளங்குகின்றான் என்பதாகும்.

### 7. ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு வானாடர் காணாத மன்.

வானவர் எனப்படும் தேவர்களுக்கே காணப்படாத, தேவர்களால் காண இயலாத இறைவன், அடியவர்களின் இதயத்தைவிட்டு ஒருபொழுதும் நீங்காத பேரறிவாய் விளங்குகின்றான்.

அடியவரென்றும், வானவரென்றும் இங்குக் கூறியது யாவராயினும் அன்பர்களுக்கு எளியனாகவும், அன்பர்களை விட்டுப் பிரியாதவனாகவும், அன்பர் அல்லாதவர்களுக்குக் காண்பதற்கே அரியவனாகவும் இருப்பவன் இறைவன் என்பதாம்.

'யாவராயினும் அன்பரன்றி அறியொணா மலர்ச் சோதியான்' என்பது திருவாசகம்.

### 8. எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம் தங்கும்அவன் தானே தனி.

வெந்நீரில் சூடு கலந்தே இருப்பது போல் எல்லா இடங்களிலும் அனைத்து உலகங்களிலும் - சடசித்துக்கள் எனப்படும் எல்லாப் பொருள்களிலும் இரண்டறக் கலந்து நிற்கும் இறைவன் அங்ஙனம் நிற்பினும் தானே தனி - தான் அவற்றின் வேறான ஒருவனே. வெந்நீரிடை நின்ற தழல் போல எல்லா இடத்தும் எல்லாப் பொருள்களிடத்தும் நீக்கமற நிறைந் திருப்பினும் இறைவன் அவற்றில் தொடக்குறாதுத் தூயனாய்த் தனித்து நிற்கும் இயல்பை உடையவன் என்பதாம்.

### 9. நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன் சலமிலன் பேர்சங் கரன்.

தன்னை வழிபடாதோருக்கு நன்மை செய்யாதவன். வழிபடுவோர்க்கு நன்மையாவும் செய்பவன் . அது பற்றி அவன் வெறுப்போ, விருப்போ உடையவன் அல்லன். அவன் பெயர் சங்கரன். சம் என்றால் சுகம், இன்பம். கரன் என்றால் செய்பவன்.

சங்கரன் - ஆன்மாக்களுக்கு உயிர்ச்சுகத்தையும், உடற்சுகத்தையும் கொடுப்பவன் என்னும் பொருள்பட சங்கரன் எனப் பெயர்பெற்றான் என்பது குறிப்பிடப்பட்டது. மரம் நிழலைத் தருகிறது என்றால் அதனை அடைந்தவர்களுக்குத் தானே தரும். அதுபோல நண்ணினர்க்கே நலம் தருதல் பற்றி இறைவனை வஞ்சனையுடையவன் என்றல் கூடுமோ என்பதாம். சலம் - வஞ்சனை .

**10. உன்னும்உள(து) ஐயம்இல(து) உணர்வாய் ஓவாது**
**மன்னுபவம் தீர்க்கும் மருந்து.**

உன்னும் - நினையுங்கள்; உளது - தோற்றுவிக்கப்படாது என்றும் உள்ள பொருள் (ஆதியும் அந்தமும் அற்றது); ஐயம் இலது - சந்தேகம் இல்லை; உணர்வாய் - அறிவாய்; ஓவாது - இடை விடாது; மன்னுபவம் - பிறவிக்குக் காரணமாகிய ஆணவமலம் என்னும் நோய்; தீர்க்கும் மருந்து - பிறவிப் பிணியை நீக்கும் மருந்து (திருவருள்).

அறிவுக்கு அறிவாய் நின்று திருவருள் என்னும் மருந்தை ஊட்டிப் பிறவிப் பிணிதீர்க்கும் இறைவன் வைத்திய நாத சிவன் இருக்கிறான். அவனை இடைவிடாது நினைக்க வேண்டும். அதில் நிலையான வீடுபேற்றின்பம் உளது . இதில் எவ்வித ஐயமும் இல்லை

## 2. உயிரவை நிலை

உயிர்கள் எண்ணில் அடங்கா.எனவே உயிர்களாகிய அவற்றின் நிலையை விரித்துக் கூறுவதால் இவ்வதிகாரம் உயிரவை நிலை எனப்பெயர் பெற்றது. பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருளில் முதல்பொருளாகிய பதியின் இயல்பினை முதல் அதிகாரத்தில் கூறிய ஆசிரியர் இரண்டாவது அதிகாரத்தில் பசுவின் நிலையைக் கூறுகின்றார். எனவே இது முதல் அதிகாரத் தினோடு இயைபுடையதாயிற்று.

## 11. பிறந்தநாள் மேலும் பிறக்கும்நாள் போலும் துறந்தோர் துறப்போர் தொகை.

துறந்தோர் துறப்போர் தொகை என்று இங்குக் கூறுவது உயிர்களின் எண்ணிக்கையை ஆகும். துறந்தோர் என்பது பிறவிப்பெருங்கடலைக் கடந்து வீட்டின்பம் பெற்றோர் . துறப்போர் என்பது இனிமேல் வீட்டின்பம் பெற இருப்போர். இதுகாறும் வீட்டின்பம் பெற்றனவும், இனி வீட்டின்பம் பெறப்போகின்றனவுமாகிய உயிர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்று கேட்போமாகில் உயிர்கள் இதுவரை பிறந்த நாட்கள், இனிமேலும் பிறக்கப் போகின்ற நாட்கள் எவ்வாறு எண்ணிலடங்காதனவோ அதைப் போலவே உயிர்களும் எண்ணில் அடங்காதவை.

## 12. திரிமலத்தார் ஒன்(று)அதனிற் சென்றார்கள் அன்றி ஒருமலத்தார் ஆயும் உளர்

உயிர்களின் தொகை எண்ணில் அடங்காமல் இருப்பினும் உயிர்கள் மூவகைப்படும். உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கக் காரணமாக இருப்பவை மலங்கள் எனப்படும் அழுக்குகள். அவை ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். உயிர்களோடு இவற்றிற்கு உள்ள தொடர்புக்கேற்ப உயிர்கள் மூன்றுவகையென வகுக்கப்பட்டன. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூவகை மலங்களோடும் தொடர்புடைய உயிர்கள் "சகலர்" எனப்படுவர். ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலங்களோடு தொடர்புடைய உயிர்கள் "பிரளயாகலர்" எனப்படுவர். மூலமலம் எனப்படும் ஆணவமல சம்பந்தம் மட்டும் உடைய உயிர்கள் 'விஞ்ஞானகலர்' எனப்படுவர். எனவே உயிர்கள் மலத் தொடர்பினால் மூவகைப்படுவனவாம்.

## 13. மூன்றுதிறத் துள்ளாரும் மூலமலத் துள்ளார்கள் தோன்றலர்தொத் துள்ளார் துணை.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று கூறப்படுகின்ற மூவகை உயிர்களும் மூல மலம் எனப் படுகின்ற ஆணவ மலத் தொடர்புடையவர்களே. பிரளயாகலரும், விஞ்ஞானகலரும் தாம் மலத்தினால் பிணிப்புண்டிருத்தலை அறிவர். ஆனால் மும் மலத்தாலும் பிணிக்கப்பட்டுள்ள சகலர் தாம் பிணிப்புண்டிருப்பதை உணர

மாட்டார். உயிர்களைக் கொத்தடிமையாய்க் கொண்டு அருள் செய்கின்ற இறைவன் அனைத்து உயிர்களுக்கும் தோன்றாத் துணையாவான்.

**14. கண்டவற்றை நாளும் கனவிற் கலங்கியிடுந்
திண்டிறலுக்(கு) என்னோ செயல்.**

இக் குறளில் ஆசிரியர் உயிர்களின் தன்னாற்றலற்ற, சுதந்திரமற்ற தன்மையை உணர்த்துகிறார்.

உயிர்களுக்கு ஐந்து நிலைகள் உள்ளன. அவை 'அவத்தை' எனப்படும். நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பவை அவ்வைந்து நிலைகள். இவற்றில் நனவு நிலையையும், கனவு நிலையையும் உவமையாகக் கொண்டு உயிர்கள் தாமே உணரும் ஆற்றல் அற்றவை என்பதை விளக்கினார்.

நனவு நிலை என்னும் விழிப்பு நிலையில் கண்ட காட்சிகளை நாள்தோறும் கனவிலே மறந்தும், பிறழ்ந்தும் காண்கின்ற குறைந்த திறமுடைய அல்லது ஆற்றல் மிகவும் குறைவாக உடைய உயிர்களுக்கு என்ன செயல் உள்ளது? என்ன சுதந்திரம் உள்ளது? திண்திறல் -இகழ்ச்சிக் குறிப்பு.

ஆக, தாமே அறியும் ஆற்றல் உயிர் களுக்கு இல்லை. அதனால் சுதந்திரமற்ற உயிர்கள் பிறிதொருபொருள் உணர்த்த உணரும் இயல்பின என்பது கருத்து.

**15. பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்(கு)
அறிவென்ற பேர்நன்(று) அற.**

உயிர்கள் நனவு நிலையிலும் கூட பொறிகளின் துணைகொண்டே அறிவன. பஞ்ச இந்திரியங்கள் எனப்படும் மெய், வாய், கண், மூக்கு, செவியெனும் ஐம்பொறிகளில் யாதானும் ஒன்றினுடைய துணையில்லாமல் உயிர்கள் நனவிலும் உணரா. இத்தகைய இயல்புடைய உயிர்களுக்கு அறிவு என்ற பெயர் மிகவும் நன்றாயிருக்கிறது என ஆசிரியர் நகைத்துக் கூறுகிறார்.

புந்தி என்பது அறிவு. இங்கு அது ஆகுபெயராய் உயிரைக் குறிக்கும்.

அறிவென்ற பேர் நன்றற என்பது முன் குறளைப் போலவே இகழ்ச்சிக் குறிப்பாய் உள்ளது.

தாமே ஒன்றையும் அறிய இயலாவிடினும் அறிவித்தால் அறியும் அறிவுடையன உயிர்கள் என்பது இதன் பொருள்.

**16. ஒளியும் இருளும் உலகும் அலர்கண்
தெளிவில் எனில்என் செய.**

கண்ணுக்கு 'அதற்கு' என ஓர் ஒளி இல்லையாயின் சூரியனோ, சந்திரனோ, தீயோ அல்லது வேறொன்றோ எந்த ஒளியாயினும் அதனால் கண்ணிற்கு என்ன பயன் விளையும்? அனைத்தையும் மறைப்பது இருளாயினும் அதனால்தான் கண்ணிற்கு என்ன தடை விளையும்?. உலகம் பல பொருள்களை உடையதாயினும் அவற்றால்தான் என்ன இன்ப, துன்பம் விளையும்?

என் செய – கண்ணிற்கு என்ன செய்ய இருக்கின்றது? ஒளி, இருட்டு, பல்வகைப் பொருட்களடங்கிய உலகு என விரிந்துபட்ட காட்சிகளைப் பகுத்துக் காட்டக் கண்ணில் ஒளியில்லையாகில் அவைகளால் கண்ணிற்கு ஒரு பயனும் இல்லை என்பது பொருள்.

இங்கு ஒளி என்பது சிவனையும், இருள் என்பது மலத்தையும், உலகு என்பது மாயையும், கண் என்பது உயிரையும், குறிப்பன.

உயிர்களிடத்து உணர்வில்லை எனின் பிற பொருள் களால் ஒரு பயனையும் அவை பெற இயலாது என்பது இதனால் சொல்லப்படுவது.

ஆசிரியர் தாம் கருதிய பொருளை நேரே வெளிப் படுத்தாது அதற்கு ஒத்த பொருளைச் சொல்லி விளக்குவதால் ஒட்டணி அல்லது பிறிது மொழிதலணி எனும் அணியை இக்குறளில் ஆசிரியர் நயம்படக் கையாண்டுள்ளார்.

விளக்க விளங்கும் கண்ணொளி போல உணர்த்த உணரும் உணர்வினை உயிர்கள் அநாதியாகவே உடையவை. உயிர்கள் சடம் அல்ல என்பது இதனால் விளங்குகிறது.

**17. சத்[து]அசத்தைச் சாரா[து] அசத்[து]அறியா[து] அங்கண்இவை
உய்த்தல்சத சத்தாம் உயிர்.**

சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகை ஆழ்ந்து அறிய வேண்டியதில்லை. அசத்து எனப்படும் பாசம் அல்லது உலகு

சடப்பொருள் ஆகையால் அது அறிவற்றது. எனவே அது எதையும் அறியாது.அவ்வாறு இருக்கையில் சத்தாகிய சிவத்தையும், அசத்தாகிய பாசத்தையும் இடைநின்று அறியும் இயல்புடையது உயிர். அது சத்தோடு சார்ந்தபொழுது சத்தாம் வண்ணத்தை எய்தும்.

அசத்தோடு சேர்ந்தபொழுது அசத்தாய் நிற்கும். எனவே உயிர்கள் 'சத்து' எனவும் படாது 'அசத்து' எனவும் படாது 'சதசத்து' எனப்படும் என்பதாம்.

இக்குறள் உயிர்கள் முழுமையான அறிவோ அல்லது அறிவே இல்லா சடமோ அல்ல என்பதை விளக்குகிறது.

## 18. இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம் பொருள்கள் இலதோ புவி

ஆகாயம், கண், படிகம் (எனப்படும் ஆடி) ஆகிய பொருள்கள் இருள் வந்தபோது இருளோடு கூடித்தாமும் இருளாகவும், ஒளிவந்தபோது ஒளியோடுகூடித்தாமும் ஒளியாகவும் இருப்பவை. சுருங்கக்கூறின் சார்ந்ததன் வண்ணம் பெறுபவை உலகத்தில் இருக்கக் காண்கிறோம். அவைபோல உயிர்கள் சார்ந்ததன் வண்ணம் ஆவனவாம்.

இருளாகிய ஆணவ மலத்தோடு சேரும்பொழுது அறியாமையில் ஆழ்ந்தும், ஒளியாகிய திருவருளோடு சேரும்பொழுது மெய்யறிவு பெற்றும் இருக்கும் இயல்பினஉயிர்கள் என்பது விளக்கப்பட்டது.

இந்த உவமேயத்தை விளக்க ஆசிரியர் உவமானத்தை மட்டுமே கையாண்டதால் இக்குறளும் பிறிதுமொழிதல் அல்லது ஒட்டணி வகையைச் சார்ந்தது.

'முழு அறிவுக்கும், சடப்பொருளுக்கும் இடைப்பட்ட பொதுஅறிவு ஒன்று இல்லை' என்னும் வாதத்தை மறுத்து, அஃது உண்டென்பது இதனால் வலியுறுத்தப்பட்டது.

## 19. ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே யாம்மன்கண் காணா தவை.

ஊமன் என்பது ஒருவகைப் பார்வைக்குறைபாடு. கண்ணின் புறத்தே தசை வளர்ந்து கண்ணின் பாவையை மறைத்துவிடும். அதனால் ஏற்படும் குருட்டுத்தன்மை ஊமன் எனப்படுகிறது. கண்ணிற்குக்காணும் திறன் இருந்தும் வளர்ந்துவிட்ட தசை பார்வையை மறைத்துவிடுகிறது.

இதனால் சூரிய ஒளியிருந்தும் ஊமன் எனப்படும் குருட்டுக் கண்ணுக்குப் பார்வை இல்லாது போவதுபோல் உயிர்களுக்கு இறைவனை அறியும் தன்மை இருந்தும் ஆணவ மல மறைப்பால் ஞானம் கைவரப்பெறாமல் இறைவனை அறியமாட்டா என்பது பொருள்.

சூரியவொளி எங்கும் நிறைந்து ஒளிவீசினும் குருடர்கள் கண்கள் மட்டும் அதனைக் காணமுடியாதுஇருப்பது போல் இறை வனது அருள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பினும் ஆணவத்தால் பிணிக்கப்பட்ட உயிர்கள் இறையருளினை அறியாது கலங்கும். இங்குக் குருட்டுத் தன்மையிலும் ஊமன் என்னும் வகையைக் கூறுவது. பார்க்கும் சக்தியுடைய கண் அதன் புறத்தே உண்டான தசை மறைப்பால் காண இயலாத நிலையில் உள்ளது. அக்குறையை நீக்கியபின் இயல்பாகவே கண் தன் பார்வையைப் பெற்றுவிடுகிறது.

அதே போன்று இறைவனை அறியும் இயல்பினதே யாயினும் உயிர் ஆணவமலம் என்னும் மறைப்பால் மயங்கிக் கிடக்கையில் இறையருளை அறியமாட்டாது. மலநீக்கம் பெற்றதும் உயிர் சிவத்தைச் சிவஞானம் கொண்டு அறியும் என்பது இதன் மூலம் உணர்த்தப் படுகின்றது.

### 20. அன்றளவும் ஆற்றும்உயிர் அந்தோ! அருள்தெரிவ[து] என்[று]அள[வு] ஒன்[று]இல்லா இடர்.

உயிர்களின் இயல்பை விவரித்த ஆசிரியர் இக்குறளில் அநாதி காலந்தொட்டே அவை படும் துன்பம் கண்டு இரங்கி ஐயோ இவ்வுயிர்கள் துன்பம் நீங்கித் திருவருள் பெற்று இன்புறுவது எக்காலம் என வினவுகிறார்.

அன்றளவும் என்பது தொன்றுதொட்டு இன்றுவரையும் என்பதாம். அளவொன்றில்லா இடர் என்றது அளவற்ற துன்பம் என்பதாக. ஆற்றும் உயிர் அந்தோ என்றது தொன்று தொட்டே உயிர்கள் அளவற்ற துன்பத்தில் உழல்கின்றனவே ஐயோ பாவம் என்பதாம். அருள் தெரிவது என்று என்பது திருவருளை இவ்வுயிர்கள் பெறுவது எந்தக் காலமோ என்ற ஏக்கத்தின் சாயல்.

காலம் காலமாக துன்பச் சாகரத்தில் தத்தளிக்கும் உயிர்கள் திருவருள் பெற்று வீட்டின்பத்தை எய்துவது எந்தக்காலமோ என்பது இதன் பொருள் 'என்றாவது ஒரு நாள் உயிர் வீடுபெற்றே தீரும்' என்னும் பொருளும் இதில் அடங்கியுள்ளது.

## 3. இருள்மல நிலை

இருள்மல நிலை என்பது ஆணவ மலத்தினது நிலை எனப்பொருள்படும். உயிர்களின் அறிவை மறைத்து நிற்பது ஆணவ மலம். எனவே அது இருள்மலம் எனப்படுகின்றது. முன்னைய இரண்டு அதிகாரங்களில் முறையே பதி, பசு ஆகியவற்றின் இயல்புகளை ஆசிரியர் விளக்கினார். முப் பொருளில் மூன்றாம் பொருளாகிய பாசத்தை இவ்வதிகாரத்தில் கூறுவதால் இதனைப் பாசநிலை எனவும் கூறுவர். உயிரவை நிலை என்று பொதுப்படக் கூறியது போல இங்கு பாசங்களின் நிலையென கூறாமல் இருள்மல நிலை என்று கூறுவது அதன் வன்மை பற்றியே.

### 21. துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும் இன்[று]என்ப[து] எவ்வாறும் இல்.

தொன்று தொட்டு இடைவிடாது தொடர்ந்து வரும் பிறவித்துன்பமும், பேரின்பமாகிய வீடுபேறும், இவற்றிற்குத் துணை நின்ற காரணங்களாகிய ஆணவமலமும், திருவருளும் இல்லை என்பது எவ்வகையிலும் பொருந்தாக் கூற்று.

முடியாமல் தொடரும் பிறவித்துன்பம் தொடங்கவும், முடியாமல் தொடரவும் துணையாக நிற்கும் மூல காரணம் ஆணவமலம். உயிர்கள் மலங்களிலிருந்து விடுபட்டு வீடெய்தத் துணை நிற்பது திருவருள். இவ்வாறு துன்பத்திற்கும் இன்பத்திற்கும் துணை புரியும் உள்பொருள்களை இல்லை என எந்தத்தர்க்க முறையிலும் நிறுவமுடியாது.

ஆணவ மலம் உள்பொருளே. இல்பொருள் என எதனாலும் மறுக்க இயலாது என உணர்த்துவதே இக்குறளின் நோக்கம்.

### 22. இருளான[து] அன்றி இல[து]எவையும் ஏகப் பொருளாகி நிற்கும் பொருள்.

நம் கண் எதிரே பலவகைப்பட்ட பொருள்கள் இருப்பினும் இருள் வந்தபொழுது நம் கண்ணுக்கு இருளைத் தவிர வேறு எதுவும் தெரியாது. இருளே எல்லாவற்றையும் மறைத்து தானே ஏகப்பொருளாகி நிற்கும்; தெரியும்.

அது போலவே ஆணவ மலமும் உயிருக்குச் சிவத்தைக் காட்டாது மறைப்பது, மயக்கத்தைத் தருவது என்பது இதன் கருத்து.

முந்தைய குறள் ஆணவத்தின் உண்மையைக் காட்டியது. இந்தக்குறள் ஆணவத்தின் இருள் தன்மையைக் காட்டுகிறது.

**23. ஒருபொருளும் காட்டா[து] இருள்,உருவம் காட்டும்
இருபொருளும் காட்டா[து] இது.**

இருள், வந்த இடத்தில் இருந்த பொருள்களை எல்லாம் மறைத்து ஒரு பொருளையும் காட்டாமல், தன்னை மட்டும் காட்டும் இயல்பினது. ஆனால் ஆணவ மலமோ தான் சார்ந்துள்ள உயிர்களுக்குப் பிற பொருளைக் காட்டாது மறைப்பதுமன்றித் தன்னையும் காட்டாது என்பது இதன் பொருள்.

முன் குறளில் ஆணவத்தை இருளோடு ஒப்பிட்ட ஆசிரியர் இக்குறள்மூலம் அது இருளைவிடக் கொடியது என்பதை விளக்கினார்.

**24. அன்[று]அளவி உள்ஒளியோ[டு] ஆவி இடைஅடங்கி
இன்றளவும் நின்றது இருள்.**

ஆணவமானது அநாதியாகவே, உயிர்களின் உள்ளொளி யாக விளங்கும் இறைவனோடு பொருந்தாது, உயிர்களைப் பற்றி நிற்கும்.

உயிர்களின் அகத்தே ஒளிர்கின்ற சிவஞானத்தின் மேல் உயிர்கள் படராவண்ணம் இறைக்கும் உயிர்க்கும் இடைப்புகுந்து ஆன்மாவை அநாதியே பற்றி இன்று வரையிலும் ஆன்மாவைவிட்டு நீங்காது நின்றது ஆணவமாகிய இருள் மலம்.

ஆணவமலம் உயிர்களை அநாதியே பற்றி நீங்காது நிற்கும் இயல்பினது என்பதை இக்குறள் உணர்த்துகின்றது.

கன்மமும், மாயையும் பிரளயகாலத்தில் உயிரை விட்டு நீங்கி மீண்டும் சிருட்டியில் வந்து சார்வன. ஆனால் ஆணவம் அவ்வாறு நீங்கிப் புணராது உயிருடன் அது அநாதியே கூடியுள்ளதால் அதைச் 'சகசமலம்' என்றும் கூறுவர்.

கன்மமும் மாயையும் கூட அநாதியே என்றாலும் அவை எப்பொழுதும் உயிரையே பற்றிக் கிடக்காமல் இறைவனிடம்

அடங்கிக் கிடந்து உயிர்களுக்கு உணர்வூட்ட இறைவனின் ஆணைப்படி இடை இடையே உயிரினைச் சாரும் இயல்பின.

உயிரோடு ஆணவம் கூடுவதைப் பிரதிபந்தம் என்றும், கன்மம் கூடுவதை அனுபந்தம் என்றும், மாயை கூடுவதைச் சம்பந்தம் என்றும் வழங்குவர். முக்தி நிலையில் தன் ஆற்றலெல்லாம் குன்றிப் பிரதிபந்தம் செய்யாமல் உயிர்களைப் பேரின்பம் நுகர விடுவது ஆணவம். எனவே ஆசிரியர் இதனை 'இன்றளவும் நின்றது இருள்' என்கிறார்.

இக்குறள் ஆணவ மலம் அநாதி என்பதையும், கன்மம் மாயையைப் போன்று நீங்கிப் புணரும் இயல்பினது அன்று என்பதையும் உணர்த்துகின்றது.

## 25. பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்[கு] உண்[டு] என்றும்
## கணவற்கும் தோன்றாத கற்பு.

இக்குறள் ஆணவமாகிய இருட்சக்தியைப் பெண் என்றும், உயிர்களைக் கணவரென்றும் உருவகித்துக் கூறுகின்றது.

எல்லா உயிர்களிடத்தும் கலந்து நிற்பினும் இருட்பாவை எனப்படும் ஆணவமலத்திற்குக் கணவர்கள் எனப்படும் உயிர்களுக்கும் தன்னைக் காட்டாத கற்பு உண்டு.

'பலரைப் புணர்ந்தும்' என்பதற்கு அனைத்துயிர்களுடனும் தொடர்புற்று இருப்பினும் என்று பொருள். 'கணவற்கும் தோன்றாத' என்பதற்குத் தான் உயிர்களோடு சேர்ந்திருப்பினும் அவ்வுயிர்களுக்கே தான் சேர்ந்திருப்பதைக் காட்டாது உணர்த்தாது என்று பொருள். "பலரைப் புணர்ந்தும்...... கற்பு" என்றது இகழ்ச்சிக் குறிப்பு.

ஒன்றாகிய ஆணவம் தன் ஆற்றலால் பல உயிர்களைப் பற்றினும் தான் உள்ளதை ஒருவருக்கும் காட்டாத தன்மையை உடையது என்பது விளக்கப்பட்டது. இதனால் மறைக்கும் இயல்புடைய ஆணவத்தின், மறைந்திருக்கும் இயல்பு கூறப்பட்டது. 'கணவற்கு' என்பது ஒருமையாதலால் இது இறைவனைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

## 26. பன்மொழிகள் என்உணரும் பான்மை தெரியாத
## தன்மை இருளார் தந்தது.

பல சொல்விப் பயனென்ன? அறியும் இயல்புடைய தாயினும் உணர வேண்டியவற்றை உயிர் உணராமல் மறைத்து நிற்பது ஆணவம் என சுருங்கச் சொல்லிவிடலாம். உணரும் இயல்புடையன உயிர்கள். உணரப்பட வேண்டியவை பதி, பசு, பாச உண்மைகளும்; சரியை, கிரியை, யோக, ஞான நெறிகளும் ஆகும். அவற்றை உயிர்கள் உணராவண்ணம் தடுக்கும் தன்மையைத் தந்தது இருளாகிய ஆணவம் என்பதாம்.

தெரியும் இயல்பு உடையதற்குத் தெரியாத தன்மை தரும் ஆற்றல் உடையது ஆணவம் என்பதை இக்குறள் விளக்கியது.

**27. இருள்இன்றேல் துன்[பு]என் உயிர்இயல்பேல் போக்கும்**
**பொருள்உண்டேல் ஒன்றாகப் போம்**

ஆணவ மலம் உயிரின் குணமன்று. அது உயிரினைப் பற்றிய குற்றம்.

ஆணவம் என்பது இல்லையென்றால் எந்தத்துன்பமும் உயிர்களுக்கு இல்லை. பிறவி எடுத்தபின் துன்பம் உண்டென்பது உறுதி. எனவே ஆணவம் உண்டென்பதும் உறுதியாகின்றது. இத்தகைய ஆணவம் உயிரின் இயல்பு அல்லது குணம் என்று சொன்னால் அது சரியன்று. வீட்டின்ப நிலையில் உயிர்கள் இறைவனின் திருவடியின் கீழ் நிற்கையில் ஆணவம் நீங்குகிறது. ஆணவம் உயிரின் குணமென்றால் திருவருள் கூடிய வீட்டின்ப நிலையில் ஆணவம் கெடும்போது உயிரும் அல்லவா கெட்டுப் போகவேண்டும்? அவ்வாறு உயிர் அழியாததால் ஆணவம் உயிரின் குணமன்று; உயிர்க்குத் துன்பம் தரும் நோய், குற்றம்.

எனவே துன்பத்திற்குக் காரணம் ஆணவம். அது உயிரின் குணமல்ல; குற்றம்.

**28. ஆ(சு)ஆதி யேல்அணைவ காரணம்என் முத்திநிலை**
**பேசா(து) அகவும் பிணி.**

ஆணவம் உயிரின் குணமல்ல. அது உயிரைப் பற்றிய நோய்; குற்றம். அது உயிரை ஒரு காலத்தில் வந்து பற்றியது என்று சொன்னால் தூய உயிரை இடையில் சேர்தற்குக் காரணம் என்ன? என்ற கேள்வி எழும். காரணம் இன்றி இயல்பாகவே உயிரோடு

வந்து சேரும் எனக்கொண்டால் முத்தியிலும் வந்து கூடும். ஆனால் அவ்வாறு வருதல் இல்லை. ஆணவம் வீட்டின்பக் காலத்தில் தன் வலிவிழந்து அடங்கிக்கிடப்பது. எனவே ஆணவ மலம் உயிருக்கு அநாதியாயுள்ள நோயாகும். முத்தி நிலையில் ஆணவம் வறுத்த வித்துப்போல் தன் தன்மை கெட்டு நிற்கும்.

இக்குறள் ஆணவம் உயிரைச் சகலநிலையின் போது வந்து சேர்வதன்று. அது அநாதியே என்பதை உணர்த்துகின்றது.

## 29. ஒன்று மிகினும் ஒளிகவரா தேல்உள்ளம்
## என்றும் அகலா(து) இருள்.

ஆணவ மலத்திற்கு மறைத்தலும், உயிருக்குப் பற்றுதல்; சார்தலும், மாயைக்கு விளக்குதலும் இயல்புகள். உலகில் இருள் மிகுந்து படரும்பொழுது ஒளி கொண்டு அவ்விருளினை நீக்க முடியும். அதுபோல உயிரில் ஆணவமாகிய இருள் மிகுந்து மறைப்பதால் இறைவன் மாயையினால் உயிர்களுக்கு உடல் கருவி கரணங்களைக் கொடுத்திருக்கின்றான். இம் மாயா காரிய உடம்பு ஆணவ இருளின் ஆற்றலை ஓரளவில் அடக்கி அறிவுபெற உதவுவது. இவ் உடம்பு முதலிய கருவிகளைக் கொண்டு உயிர் ஆணவ இருளை மாய்த்து அறிவு விளங்கப் பெறவில்லையெனில் என்றும் ஆணவ இருளை நீக்க இயலாது என்பது பொருள்.

இதனால் ஆணவ மல நீக்கத்திற்கு வழி கூறப்பட்டுள்ளது.

## 30. விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
## வடிவாதி கன்மத்து வந்து.

உடல், கருவி, உலகு, நுகர்வுகள் ஆகியவற்றைத் தனு கரண, புவன, போகங்கள் என்கிறோம். இவை உயிர்களின் புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப அவைகளுக்கு அமைகின்றன. இவை மாயையினால் ஆனவை. இந்த மாயையை ஆசிரியர் இங்கு விளக்கிற்கு ஒப்பிடுகிறார். பொழுது விடிகின்ற வரையில் இருளினைச்சிறிதே நீக்கி நமக்கு வெளிச்சத்தைத்தருவது விளக்கு. அதுபோல இறைவனின் திருவருளாகிய பேரொளி தோன்றி ஆணவ வல்லிருள் நீங்கும் வரையில். ஆணவ இருளினைச் சிறிதே நீக்கி அறிவு விளங்கத் துணை நிற்கும் தனு, கரண, புவன, போகமாய இம்மாயா காரிய உடம்பு என்று கூறுகிறார்.

இறைவனின் திருவருள் பெறுமளவும் பிறப்புண்டு. அப்பிறப்புக்கள் உயிர்களின் கன்மங்களுக்கேற்ப மாயையால் மாறி மாறி அமையும். அப்பிறவிகள்தோறும், பிறவாநிலை எய்தும் வரையில் இம்மாயையே ஆணவ இருளைச் சற்றே நீக்கி உயிர்களுக்கு அறிவு விளங்கத் துணைபுரியும் என்பது இதனால் உணர்த்தப்படுகிறது.

ஆணவ இருளில் சிக்கித் தவிக்கும் உயிர்களுக்கு மாயை ஒரு கைவிளக்கு என்று இக்குறள் கூறுகின்றது.

## 4. அருளது நிலை

அருளது நிலை என்பது திருவருளின் தன்மையை விளக்குவது. மூன்றாம் அதிகாரத்தில் மலஇருளைப் பற்றிக் கூறினார். இந்த அதிகாரத்தில் அவ்விருளை நீக்கும் திருவருளின் தன்மையைக் கூறுகின்றார். எனவே முந்தைய அதிகாரத்தினோடு இது இயைபுடையதாயிற்று.

**31. அருளிற் பெரிய[து] அகிலத்து வேண்டும்**
**பொருளின் தலைஇலது போல்.**

எல்லாப் பொருள்களுள்ளும் எந்த ஒன்றையும் ஒருவர் தாம் விரும்பிய பொருளுக்கு மேலான, ஒப்பான பொருளாகக் கருதுவது இல்லை. எனவே அந்தப் பொருளுக்கு மேலான பொருள் எதுவும் உலகத்தில் இல்லை என்பதுபோல உயிர்கள் ஈடேறத் திருவருளுக்கு மேலான பொருள் எதுவும் இல்லை. அருளுக்கு மேலாக, அதைவிட உயர்ந்ததாக விரும்பத் தக்கது, ஒருபொருளும் இல்லை என்பது கருத்து.

திருவருளினது உயர்வு இக்குறளில் கூறப்பட்டது.

**32. பெருக்க நுகர்வினை பேர்ஒளியாய் எங்கும்**
**அருக்கன்என நிற்கும் அருள்.**

உலகில் யாவரும் உணவுப் பொருள்களையீட்டவும், அவற்றை நுகரவும் ஒளியைக் கொடுத்து நிற்கும் கதிரவனைப் போல, திருவருள் உயிர்களெல்லாம் பாவ புண்ணியங்கள் செய்தற்கும், அவற்றிற்குரிய சுக துக்கங்களையடைதற்கும் [அதன் பயனாய் ஆணவ வன்மையைக் குறைத்து ஆணவ மலத்தின்று நீங்குவதற்கும்] துணை நிற்கின்றது.

இதனால் அருளே யாவற்றிக்கும் உறுதுணையென்பது கூறப்பட்டது.

### 33. ஊன்அறியா[து] என்றும் உயிர்அறியா[து] ஒன்றும் இவை
### தான்அறியா தார்அறிவார் தான்.

உடம்பு (மாயை)சடம். அஃது அறிவில்லாதது. உயிர் சிற்றறிவுடையது; உணர்த்தவே உணரும்; தானே அறியும் ஆற்றல் அற்றது. எனவே திருவருள் அறிவித்தாலன்றி எந்த உயிர் பொருள்களைத் தானே அறியும்? திருவருள் அறிந்து அறிவித்தாலன்றி எந்த உயிராலும் எதையும் அறிய முடியாது என்பது இதன் பொருள்.

முன் குறளில் சொல்லப்பட்ட பொருள் இக்குறளால் வலியுறுத்தப்பட்டது.

### 34. பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்[து] அருள்உயிர்கள் மால்ஆழி ஆளும் மறித்து.

பால் நிரம்பிய சமுத்திரம், பாற்கடல். இதில் இருக்கும் மீன்கள் பாலைப் பருகாது அங்குள்ள சிறிய உயிர்களை, இழிவான பொருள்களை விரும்பி உண்ணும் தன்மையைப் போன்றது.

எங்கும் நிறைந்துள்ள இறைவனது திருவருட்கடலிலேயே அழுந்தியுள்ள உயிர்கள் அத்திருவருளை நுகர்ந்து சிவானுபவம் பெற்று வீட்டின்பம் எய்தாமல் மாயா போகமாகிய புலன்வழித் திரிந்து துன்புறுகின்ற தன்மை.

அருளோடு கூடிநின்றும் உயிர்கள் மயங்கித் துன்புறும் இழிவு கூறப்பட்டது.

### 35. அணுகு துணைஅறியா ஆற்றோனில் ஐந்தும் உணர்வை உணராது உயிர்.

தனக்கு அருகே துணையாக வருகின்றவனை அறியாத வழிப்போக்கனைப் போலவும், ஐம்பொறிகளையும் செயல் படுத்துவது உயிர் ஆயினும் அவ்வாறு தம்மைச் செயல்படுத்தும் உயிரினை அறியமாட்டாத ஐம்பொறிகளைப் போலவும், உயிரும்

திருவருளினால் செயல்பட்டும் அத்திருவருளை அறியாமல் துன்புறுகிறது. அனைத்திற்கும் துணையாய்த் தன்னோடே இருக்கும் திருவருளை உணராத நிலை உயிரின் நிலை என்பதை இக்குறள் விளக்குகின்றது.

**36. தரையை அறியாது தாமே திரிவோர்
புரையை உணரா புவி.**

தரையின் மீதுதான் எல்லோரும் நடக்கிறோம். தரைதான் எல்லோருக்கும் ஆதாரம். ஆனால் இந்தத் தரையைப் பூமியை மறந்துவிட்டுத் தமக்குத் தாமே ஆதாரமென்று நினைத்துத் திரிவார் போல் உயிர்களும் அருளினைத் தமக்கு ஆதாரமென்று அறிவதில்லை என்பது இதன் பொருள்.

அருளே உயிர்களின் ஆதாரம் என்று கூறுகின்றது இக்குறள்.

**37. மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானம்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்.**

சிறுபொருள்களை எங்கேனும் தொலைத்துவிட்டுத் தேடுவது போல், தொலைக்க முடியாத கண்எதிரே இருக்கின்ற பெரியபொருள்களைக் காணவில்லை என நினைத்துத் தேடுவது மடமை.

மலையில் இருந்துகொண்டே மலை எங்கே என்று தேடுபவரும், நிலத்தில் இருந்து கொண்டே நிலத்தைக் காண வில்லையே எனத் தேடுவோரும், யாவற்றையும் உள்ளடக்கி எங்கும் விரிந்திருக்கும் விண்ணில் தான் இருந்தும் விண் எங்கே எனத் தேடுவோரும், ஞானமெனும் அருளிலிருந்து கொண்டே ஞானத்தைத் தேடுவோரும், தம்மைத் தாமே கெடுத்துக் கொள்பவர்கள். தம்மை அறியாது தமக்கே கேடு தேடும் அறிவிலிகள் ஆவர்.

ஆகவே திருவருளைச்சிந்தித்து உணர்தல் வேண்டும் என்பதாம். இக்குறள் ஒப்புமைக் கூட்ட அணியை உடையது.

**38. வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்துஇருளாம்
கள்ளத் தலைவர் கடன்.**

வெள்ளத்துள் மிதந்திருந்தும் வேறுநினைவால் நீர் பருகாது நாவுலர்ந்து வருந்துபவனைப் போலவும், இருள் நீங்கி எங்கும் சூரிய ஒளி பரவி விடிந்திருக்கும் நிலையில் இருள் இன்னும் நீங்கவில்லையோ என மயங்கும் மடவோரைப் போலவும், எவ்விடத்திலும் திருவருள் நிறைந்திருந்தும் அதனை உணர்ந்து பேரின்பத்தை நுகராமல் புலன் வழிச் சென்று மயங்குவதாய் உயிர்களின் நிலைமை உள்ளது.

நீரிலிருந்து கொண்டே நீர் அருந்தாமல் தவிப்பது நீரின் குற்றமன்று. விடிந்து விட்ட பின்னும் வெளிச்சத்தை உணராமல் இருள் என மயங்குவது வெளிச்சத்தின் குற்றமன்று. இவற்றைத் துய்த்தும், உணர்ந்தும் இராதது அதைச் செய்யாதவனின் குற்றமே. அதுபோலத் திருவருளை அனுபவிக்கவும், அறியவும் வாய்ப்பு உள்ளது. இருந்தும் திருவருளை அறியாதது உயிரின் குற்றமேயன்றித் திருவருளின் குறையன்று என்பதாம்.

**39. பரப்[பு]அமைந்து கேண்மின்இது பால்கலன்மேல் பூஞை**
**கரப்[பு]அருந்த நாடும் கடன்.**

பரபரப்பின்றி அமைதியாக இஞ்ஞான நூற் பொருளினைக் கேட்டுத் தெளிக. மனஒடுக்கமின்றிக் கேட்பின் உறியிலுள்ள பால்குடத்தின் மேலே இருக்கும் பூனை அப்பாலினைக்குடிக்காமல் வெளியில் இருக்கும் கரப்பான் பூச்சியைத் தின்ன பால்குடத்தினின்றும் தாவிப் பாய குடமுடைந்து பால் வீணாகக் கரப்பான் பூச்சியும் ஓடிவிட்டது போலாகும். உணவை இழந்த பூனை போன்று பயனை இழந்து வருந்துவர், ஆசிரியர் உரையை அமைதியுடன் கேளாதவர் என்பதாம்.

மெய்யுணர்வு நூல்களை அமைதியாக இருந்து அடக்கமுடன் கேட்டு உணர்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் வெளிப் பொருள்களில் மனம் அலைந்து கொண்டிருக்கப் படபடப்பாகக் கேட்பதில் பயனில்லை என்பதை இக்குறள் உணர்த்துகின்றது.

**40. இற்றை வரைஇயைந்தும் ஏதும் பழக்கம்இலா**
**வெற்[று]உயிர்க்கு வீடு மிகை.**

அநாதியே தொடங்கி இன்று வரைக்கும் உயிரானது திருவருளோடு கூடியிருந்தும் அத்திருவருளோடு பழகி அதில்

சிறிதும் தோயாத வெற்று உயிர்க்கு, பயனற்ற உயிருக்கு வீடு பேறென்பது மிகையானதே. இத்தகைய இயல்புடைய உயிர்களுக்கு வீடுபேறு உரித்தாகாது என்பது பொருள்.

## 5. அருள்உரு நிலை

அருளுரு நிலை என்பது அருளே உருவாகிய குருவினது தன்மை என்பதாம். திருவருளின் தன்மையை உணர்த்தியபின் ஆசிரியர் அவ்வருளே குருவாய் எழுந்தருளிவரும் இயல்பினை இந்த அதிகாரத்தில் கூறுகின்றார். குரு என்பதற்குப் பாசத்தை நீக்குபவர் என்று பொருள்.

**41. அறியாமை உள்நின்(று) அளித்ததே காணும்**
**குறிஆகி நீங்காத கோ.**

கண்ணுக்குத் தெரியாமல் இதுகாறும் துணையாய் நின்று நம்மைக் காப்பாற்றிய இறைவனே நாம் பக்குவம் அடைந்தபோது நம் கண்ணாற்காணும் வடிவினையுடைய குருவாக வந்து நீங்காது நின்று ஞானத் தலைவனாய் விளங்குகின்றான்.

நாம் கட்டுண்ட காலத்தில் நம் கண்ணிற்குத் தெரியாமலே நமக்குத் துணையாய் நின்று நம்மைக் காப்பாற்றிய முதல்வனே நாம் பக்குவம் எய்திய நிலையில் நமக்குக் குருவாக வந்து நம்மை ஆட்கொண்டருளுவான் என்பது இதன் பொருள்.

இறைவனே குருவாதல் இதன் வழி உணர்த்தப்பட்டது. "குருவே சிவம் எனக் கூறினன் நந்தி" என்பதுதிருமந்திரம். "பதம் முதல் குருவுமாய்" என்பது சிவஞான போதம்.

**42. அகத்துஉறுநோய்க்(கு) உள்ளினர் அன்றி அதனைச்**
**சகத்தவரும் காண்பரோ தான்.**

வீட்டில் உள்ளவனுக்கு ஏற்பட்ட நோயை அவ்வீட்டில் அவனுடன் வாழும் அவனுடைய அன்பர்கள்தாம் அறிந்து நீக்கமுடியும். அந்நோயினை உலகத்தில் உள்ள அயலார்கள் அறியவல்லரோ? அறியமாட்டார். அதைப் போன்றே உயிரைப் பிணித்துள்ள ஆணவம் என்னும் நோயை உயிருக்குயிராய் விளங்கும் இறைவனே குருவாய் எழுந்தருளிவந்து நீக்கினால் அன்றி வேறு யாரால் நீக்க இயலும்? வேறு யாராலும் நீக்க இயலாது.

உடலுக்கு ஒரு பிணி வந்தபொழுது அந்த நோயை உடலுக்கு உடனாயிருக்கின்ற உயிர் அறிகின்றதேயல்லாமல் மற்றவர்கள் உணர்வார்களோ? உணரார். அதுபோலவே உயிரிடம் படிந்துள்ள அறியாமையை உயிருக்குயிராய் இருக்கின்ற பரமசிவனே குருவாய் வந்து நீக்கினால் அன்றி மற்றவரால் நீக்க இயலாது எனவும் பொருள் கொள்ளலாம்.

'ஞானகுரு இறைவனேயல்லது வேறல்லர்' என்பதை வலியுறுத்துகின்றது இக்குறள்.

## 43. அருளா வகையால் அருள்புரிய வந்த
## பொருளார் அறிவார் புவி.

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய இநத நான்கு தொழில்களையும் மறைந்து நின்று செய்தருளுவது போல அருளல் என்னும் தொழிலையும் குருவடிவாம் மறைப்பால் தன்னை மறைத்துக் கொண்டு செய்ய வந்துள்ளான். இறைவனே குருவாகப் பக்குவமுள்ள உயிர்களுக்கு அருள வந்துள்ளான். அவ்வுண்மைப் பரம்பொருளே குருவடிவமென்பதனை அறியமாட்டாது இந்த உலகு என்பது இதன் பொருள்.

அருளா வகையால் அருள் புரிதலாவது, தான் இறைவன் ஆதலைக் காட்டாமல் குருவடிவில் நின்று அருள்புரிதலாம்.

## 44. பொய்இருண்ட சிந்தைப் பொறிஇலார் போதமாம்
## மெய்யிரண்டும் காணார் மிக.

ஆணவ மலத்தால் அறியாமை மிகுந்த சித்தத்தை உடைய அறிவில்லாதவர்கள் - நிலையற்ற உலக இன்பத்தில் கருத்துடையவர்கள் அறிவுமயமாகிய அருளையும், அத்திருவருளே குருவடிவாய் வந்தருளியது என்பதையும் சிறிதும் அறிய மாட்டார்கள்.

ஞான மயமாய் விளங்குபவன் இறைவன்; குரு உருக்கொண்டு வந்திருப்பவன் இறைவனே. இவ்விரண்டு மெய்ப்பொருள்களையும் அறிய மாட்டார்கள் அறியாமை மிகுந்த சித்தத்தையுடைய அறிவில்லாதவர் என்பது இதன் பொருள்.

**45. பார்வைஎன மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வைஎனக் காணார் புவி.**

வேடன் பழக்கப்படாத புதிய விலங்குகளைப் பிடிப்பதற்குப் பழக்கப்பட்ட விலங்கினையோ அல்லது அவ்வின விலங்குபோன்ற உருவத்தையோ பயன்படுத்துவான். இதற்குப் 'பார்வை மிருகம்' என்று பெயர். மற்ற மிருகங்கள் பார்ப்பதற்காகக் காட்டப்படும் மிருகம்.

அதைப் போலவே இறைவனும் உயிர்களை உய்விக்கும் பொருட்டு அவர்களைத் தன் வயத்தராக்குவதற்கு மானிடச் சட்டையைப் போர்த்திக் கொண்டு குருவடிவாய் எழுந்தருளி வந்துள்ளான் என்பதை உயிர்கள் அறியமாட்டா. இறைவனே குருவுருத் தரித்து வந்துள்ளான் என்பதனை அறியாதார் இழிபு விளக்கப்பட்டது.

**46. எமக்(கு)என் எவனுக்கு எவைதெரியும் ஆவ்வத்
தமக்(கு)அவனை வேண்டத் தவிர்.**

உலகியலிலும் எத்துறையில் யார் வல்லவர்களோ அத்துறையில் அவர்களை அணுகியே அறிவு பெறவேண்டியுள்ளது. அம்முறையில் மெய் ஞானம் நமக்கே எப்படி விளங்கிவிடும்? விளங்காது. எனவே மெய்ப்பொருள் நூல்களைக் குருவின் துணையின்றிக் கற்பின் மலைப்பும், பொருள் மாறுபாடும் தோன்றும். குருவினால் எமக்கு என்ன பயன் என்ற கேள்வியை விடுத்து, குருவினை நாடி நூற் பொருளை வேண்டி நிற்க அந்நூற்பொருள்களில் உள்ள ஐயம் திரிபு முதலியன நீங்கும்.

எனவே பாச நீக்கமும், வீடுபேறும் ஒருங்கே வேண்டும் எனில் குருவின் துணையின்றி இவைகிட்டா. ஆகவே எமக்கு என்ன? என்ற கேள்வியை விடுத்து ஞானாசாரியனையே சார்ந்து நிற்கவேண்டும் என்று விளக்குகின்றது இக்குறள்.

**47. விடம்நகுலம் மேவினும்மெய்ப் பாவகனின் மீளும்
கடனில்இருள் போவ(து)இவன் கண்.**

ஒருவனுக்கு உடம்பில் விடம் ஏறிவிடுகிறது. அவ்விடத்தை நீக்குதற்குக் கீரியையே கொண்டுவந்து அவன் கழுத்தில் கட்டினாலும் அவ்விடம் நீங்குவதில்லை. ஆனால் விடம் நீக்கும்

மந்திரம் அறிந்தஒருவன் தன்னைக் கிரியாகப் பாவித்து மந்திரம் சொல்லின் அம்மந்திர வலிமையினால் விடம் நீங்கிவிடும்.

அதைப்போலவே இறைவன் உயிரோடு கலந்திருப்பினும் குருவாக வந்து சீடனைத் தன் அருட்பார்வையால் பார்த்தால் தான் ஆணவம், கன்மம், மாயை ஆகியவை நீங்கும்.

இறைவன் உயிர்களோடு அனாதியே கலந்து நிற்பினும், அவன் குருவுருக் கொண்டு வந்தாலன்றிப் பாசம் நீங்காது என்பதை எடுத்துரைக்கின்றது இக்குறள்.

குருவினால் இருளாகிய பாசம் நீங்கவேண்டும் என்பது கூறப்படுகிறது.

## 48. அகலத் தரும்அருளை ஆக்கும் வினைநீக்கும் சகலர்க்கு வந்தருளும் தான்.

ஆணவ மலத்தினை மட்டும் உடைய உயிர்களில் (விஞ்ஞானகலரில்) பக்குவப்பட்ட உயிர்களுக்கு அறிவுக்கறிவாய் உள்நின்று அருள் சுரந்து ஆணவ மலத்தை நீக்கி உள் நின்று உணர்த்தி வீடுபேற்றை அடைவிப்பான் இறைவன்.

பிரளயாகலர்-ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்களை உடைய உயிர்கள். இவர்களில் பக்குவர்க்கு மானும், மழுவும், நான்கு தோள்களும், நீலகண்டமும், முக்கண்ணுமாக உள்ள தெய்வ வடிவுகொண்டு எழுந்தருளி இவ்வுயிர்களின் பால் உள்ள ஆணவம் கன்மம் ஆகிய இருமலத்தையும் நீக்கி இறைவன் அருள் புரிவான்.

சகலர்-ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மூன்று மலத்தினையும் உடைய உயிர்கள். இவர்களில் பக்குவப்பட்டவர் களுக்கு மானுட வடிவம் கொண்டு குருவென எழுந்தருளி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கி இறைவன் மோட்சத்தை அடைவிப்பான்.

இதனால் இறைவன் மானுட சட்டை போர்த்தி குருவாக வருவதன் காரணம் கூறப்பட்டது.

## 49. ஆர்அறிவார் எல்லாம் அகன்ற நெறிஅருளும் பேரறிவான் வாராத பின்.

எல்லாம் அகன்ற நெறி என்பது முக்திநெறி, வீட்டுநெறி. மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத நெறி. அந்த வீட்டுநெறியை வாலறிவனாகிய, நிறைந்த ஞானத்தினையுடைய இறைவனே

குருவாக வந்து அருளாதபோது அதனை அறியக்கூடியவர் யார்? இறைவனே குருவாக வந்து அருளினால் அன்றி வீட்டுநெறியை யாரும் உணர இயலாது என்பது இதன் பொருள்.

'எல்லாம்' என்ற சொல்லுக்கு மந்திரம் முதலாக கலையீறாகவுள்ள எல்லா அத்துவாக்களையும் என்பது பொருள். ஆறு அத்துவாக்களையும் கடந்ததே சித்தாந்த நெறியின் முக்தி என்பது கருத்து.

அனைத்தையும் அறிந்த இறைவனே குருவென வந்து உணர்த்தினால் அன்றிப் பேருண்மையை யாரும் அறியமுடியாது என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.

## 50. ஞானம் இவன்ஒழிய நண்ணியிடும் நற்கல் அனல் பானு ஒழியப் படின்.

'நற்கல்' நல்ல சூரிய காந்தக் கல். இக்கல்லைச் சூரிய ஒளிக்கு நேரே பிடிக்கும்போது அக்கல் சூரியக் கதிர்களை ஒன்றுகுவித்து தீயினை உண்டாக்கும் தன்மையது. இதனால் அக்கல்லைச் சார்ந்து நிற்கும் பஞ்சு முதலியன தீப்பற்றிக் கொள்ளும். பழைய காலத்தில் இம்முறையால் தீமூட்டும் பழக்கம் இருந்துள்ளது. சூரிய ஒளி இல்லையானால் இக் கதிர்க் கல்லினடத்து தீ உண்டாகாது. இதனை உவமையாகக் கொண்டு இங்குக் குருவின் இன்றியாமையை ஆசிரியர் விளக்குகின்றார்.

குருவின் துணையின்றி ஒருவர்க்கு அறிவு விளங்குதல் கூடும். எப்பொழுது? கதிரவன் இல்லாமலேயே கதிர்க்கல்லினடத்து தீயுண்டாகுமெனில் என்பது இதன் பொருள்.

கதிரவன் இன்றிக் கதிர்க்கல் தீயினைத் தோற்றுவிக்காது. அதேபோல் சிவனின் திருவருள் வடிவாகிய குருவின்றி உயிர்களுக்குச் சிவஞானம் தோன்றாது என்பது வலியுறுத்தப் பட்டுள்ளது.

## 6. அறியும் நெறி

அறியும் நெறி என்பது உண்மைப் பொருளை அறியும் முறைமை எனப் பொருள்படும். அருட்குருவால் உணர்த்தப்படும் உண்மைகளை அறியும் முறைமையை இந்த அதிகாரத்தில் கூறுகின்றார்.

### 51. நீடும் இருவினைகள் நேராக நேர்ஆதல் கூடும்இறை சத்தி கொளல்.

தொடர்ந்து வரும் நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளிடத்தும் உவர்ப்புத் தோன்றுதல், அதன் பயனாக அவ்வினைகளால் விளையும் இன்ப துன்பங்களைச் சமமாக ஏற்றுக் கொள்ளும் பக்குவ நிலையை எய்துதல். உயிர்கள் இந்நிலைகளை எய்தும் போது இறைவன் சத்தி அருட் சத்தியாய் உயிர்களிடத்துப் பதியும். உயிர்கள் அதனைப் பற்றிக் கொள்ளும்.

இக்குறளில் உயிர்களிடத்து இறைசத்தி அருட்சத்தியாய்ப் பதியும் காலம் கூறப்பட்டுள்ளது. அருட் சத்தி பதிவு சத்தி நிபாதம் என்று சொல்லப்படும்.

### 52. ஏகன் அநேகன் இருள்கருமம் மாயைஇரண்டு ஆகஇவை ஆ(று)ஆதி யில்.

ஏகனாகிய இறைவன், எண்ணற்ற உயிர்கள், இருள் மலம் எனப்படும் ஆணவமலம், கன்ம மலம், சுத்த மாயை, அசுத்த மாயை எனப்படும் இருவகை மாயைகள் ஆகிய இவ் ஆறும் அநாதியாகவே தோற்ற அழிவுகள் இன்றி உள்ளன.

இறைவன் ஒருவன், உயிர்கள், ஆணவம், கன்மம், சுத்த அசுத்த மாயைகள் இரண்டு, ஆக இந்த ஆறு பொருள்களும் தொடக்கமின்றி இருக்கும் நித்தியப் பொருட்கள் என்பது இதன் பொருள். இந்த ஆறும் என்றும் உள்ளன எனக் கொள்வதே சைவ சித்தாந்தம்; அல்லது சித்தாந்த சைவம்.

### 53. செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும் உய்வான் உளன்என்று உணர்.

செய்வான் – கர்மங்களைச் செய்கின்ற உயிர், செய்வினை – அவ்வுயிர் செய்யும் வினைகள், (நன்மை தீமை, பாவ புண்ணியம்), சேர்பயன் – செயல்களைச் செய்வதால் சேருகின்ற பயன். நன்மை,

தீமை அல்லது புண்ணிய பாவ செயல்களுக்கு ஏற்ப விளையும் இன்ப துன்பங்கள். சேர்ப்பவன் - செயல்களால் விளைந்த பலன்களைச் செய்தவனிடம் சேர்ப்பவனாகிய இறைவன். செயல்களைச் செய்ததனால் சேர்ந்த பயனாகிய இன்ப துன்பங்களைச் செயல்களைச் செய்த உயிர்களிடம் சேர்ப்பவன் இறைவன். உயிர்கள், அவற்றின் செயல்கள், செயலின் பயன்கள், பயன்களைச் செய்தவனிடம் சேர்ப்பிக்கும் இறைவன் என்னும் இந்நான்கும் உண்டு என்று உயிரே நீ உய்யும் பொருட்டு அறிவாயாக என்பது பொருள்.

இவற்றை உணராவிட்டால் யான் எனது என்னும் செருக்கு வளரும். இதனால் பிறவித் துன்பம் நீங்காது தொடரும். எனவேதான் உயிர்கள் உய்வதற்காக இந்நான்கினையும் உணர வேண்டும் என ஆசிரியர் கூறுகிறார்.

மற்ற மூன்றினை ஒப்புக் கொண்டு, சேர்ப்பவனை. 'இல்லை' எனக் கூறும் வாதத்தினை மறுத்து, 'சேர்ப்பவன் உண்டு' என நிறுவுதல் இக்குறளின் குறிக்கோள்.

**54. ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனொ(டு)உயிர்**
**தான்உணர்வோடு ஒன்றாம் தரம்.**

'ஊன்' எனப்படும் இவ்வுடம்பு உயிரால் வாழ்கிறது. அதைப்போல் உடம்போடு கூடிய இவ்வுயிர் திருவருளோடு கூடி வாழ்கிறது என்பது இதன் பொருள்.

உடல் இயங்க உயிர் வேண்டும். அதுபோல உயிர் இயங்கக் காரணமாவது திருவருள் என்பதாம்.

**55. தன்நிறமும் பல்நிறமும் தானாம்கல் தன்மைதரும்**
**பொன்நிறம்போல் மன்நிறம்இப் பூ.**

கண்ணாடி அதன் நிறத்தையும், தன் முன்னே உள்ள பொருள்களின் பல வண்ணங்களையும் காட்டுதற்குக் காரணமாக விளங்குகின்ற சூரியனைப் போல, திருவருள் உயிர்கள் வீட்டின்பம் பெறவும், பிறவிப் பெருங்கடலில் தவிப்பதற்கும் காரணமாக உள்ளது.

திருவருள் மறைப்பாற்றலால் மலங்களை முதிர்விக்கும். வனப்பாற்றலால் மலங்களை நீக்கி உயிரின் அறிவாற்றலை விளக்கும். இவ்விரண்டையும் செய்து இவற்றிற்கு மேம்பட்டும் நிற்கும்.

எனவே, பெத்த நிலை, முத்தி நிலை இரண்டிற்கும் திருவருளே காரணம் என்பது இதன் பொருள். பொன் – சூரியன்.

### 56. கண்டுஒல்லை காணும்நெறி கண்ணுயிர் நாப்பண்ஒளி உண்டுஇல்லை அல்லாது ஒளி.

கண்ணுக்குப் பார்க்கும் ஆற்றல் இருப்பினும், வெளிச்சம் இல்லையெனின் பொருளைப் பார்க்க இயலாது. அதைப் போலவே அறியும் உயிர் இறைவனது திருவருள் அறிவித்தாலன்றி எதனையும் அறியாது. கண் பார்க்கும் இயல்புடையது, ஆயினும் பார்ப்பதற்கு வெளிச்சம் வேண்டப்படுவது. உயிர் அறியும் இயல்புடையது, ஆயினும் அறிவிக்க இறைவனின் திருவருள் இல்லையேல் உயிர் எதனையும் அறியாது.

கண் ஒளியின் துணை கொண்டு யாவற்றையும் அறிவது போல, உயிரும் திருவருளின் துணையால் யாவற்றையும் அறிகின்றது என்பது இதன் கருத்து.

### 57. புன்செயலின் ஓடும் புலன்செயல்போல் நின்செயலை மன்செயல(து) ஆக மதி

புலன்களின் செயல்கள் யாவும் உயிரினால் செய்யப்படு பவையே. உயிர் பொறிகளை ஏவ அவை ஐம்புலன்களைப் பற்றி அவற்றை உணர்கின்றன. எனவே பொறிகளின் செயல்களுக்கு உயிரே காரணம். அதுபோல நின் செயல்கள் யாவும் (உயிரின் செயல்கள் யாவும்) இறைவனின் திருவருளினாலேயே நிகழ்கின்றன என்பதனை நீ அறிவாயாக என்பது இதன் பொருள்.

நீ பொறிகளை இயக்க அவை செயல்களைச் செய்கின்றன. பொறிகளின் செயல்களுக்கு நீ காரணமாக இருப்பதனால் அவற்றின் செயல்களை உன்னுடைய செயல்களாக நினைக் கின்றாய். அதுபோலவே இறைவனது திருவருளாற்றல் உன்னை இயக்க நீ செயல்படுகின்றாய். எனவே உன் செயல்கள் யாவற்றிற்கும் இறைவனே காரணமானவன். எனவே உன் செயல்கள் யாவையும் இறைவனின் செயல்களாகக் கருதுவாயாக என்று விளக்குகின்றது இந்தக் குறள்.

உயிர் வெறும் கருவி, இறைவனே அனைத்திற்கும் கர்த்தா. இதுவே உண்மை என எண்ணப் பிறப்பறும்; திருவடிப்பேறு வந்தெய்தும்.

இறைவனது செயல்வழி நிற்றல் இதனால் உணர்த்தப் பட்டது.

## 58. ஓராதே ஒன்றையும்உற்(று) உன்னாதே நீமுந்திப் பாராதே பார்த்ததனைப் பார்.

ஒன்றையும் நீயாக ஆராய வேண்டாம். ஒன்றையும் அறியும் பொருட்டு கூர்ந்து நோக்கவும் வேண்டாம். முற்பட்டுச் செய்திகளைப் பார்க்கவும் வேண்டாம். உன்னைப் பார்க்க வைத்துக் கொண்டிருக்கும் அத்திருவருள் தனையே நீ எண்ணியிரு.

நீ ஆராய்ந்தால் உன்னுள் நின்று உன்னை ஆராயவைப்பதும், நீ அறிய முயன்றால் உன்னகத்தே நின்று உன் அறிவாய் விளங்கி அறியவைப்பதும், நீயாக முந்தி பார்க்குங்கால் நின்னுள் நின்று நின்னை முந்தச் செய்வதும் திருவருளே. உன்னுள் நின்று உன்னைப் பார்க்கும் படி செய்வதும் திருவருளே. எனவே இச்செயல்களை நீயாகச் செய்ய வேண்டாம்; உன்னைப் பக்குவப் படுத்தப் பார்க்கின்ற திருவருளைப்பார்.

மாற்றம் மனங்கழிய நிற்கும்போது திருவருள் வெளிப்படும். உள்ளம் அசைவற்று இருத்தலே சிவபோதம் பெறுவதற்குரிய வழியாகும்.

## 59. களியே மிகுபுல னாக்கருதி ஞான ஒளியே ஒளியா ஒளி

திருவருளால் கிடைக்கப் பெற்ற பேரின்பப் பெருமகிழ்ச்சியையே பெரியதாகக் கருதி அதைக் கொடுத்த ஞானஒளியுடன் நீ இரண்டறக் கலந்து நிற்பாயாக என்பது பொருள்.

திருவடியுணர்வு கைகூடிய பின் அந்தக் களிப்பே பெரும்பேறெனக் கருதிக் கொண்டு ஜோதியாகிய அத்திருவடியின் பத்தினின்றுப் பிரியாமல் அதனுடன் இரண்டறக் கலந்து நில் என்று உயிருக்கு உணர்த்துகின்றது இக்குறள்.

## 60. கண்டபடியே கண்டு காணாமை காணாமல் கொண்டபடியே கொண்டு இரு

உனக்கு ஞானத்தை அளித்த திருவருளைக் கண்டு, அறியாமையைத் தருகின்ற உடல், உலகப் பொருள்களில் கருத்தைச் செலுத்தாமல், திருவருள் உன்னை எப்படி கொண்டதோ அப்படியே இருப்பாயாக என்பதாம்.

திருவருள் கைவரப் பெற்றபின் அதனை நழுவவிடாது அதனுள் அழுந்தித்திளைக்க வேண்டும். உலகப்பற்றைத் துறந்து

பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும். திருவருள் தந்த இறைவன் பால் மாறா அன்பைப் பொழிதல் வேண்டும்.

கடைசி மூன்று குறட்பாக்களும் முறையே ஞானத்தினைக் காணுதல், கண்டு அதனுடன் கலத்தல், கலந்து அதன் வயத்தனாதல் ஆகியவற்றை எடுத்துரைத்தன.

## 7. உயிர் விளக்கம்

உயிர் விளக்கம் என்பதை ஆன்மசுத்தி என்று வடமொழியில் கூறுவர். திருவருளால் ஆணவ மல நீக்கம் பெற்று, உயிர் தன் செயல் இன்றித் திருவருள் வயப்பட்டு விளக்கமுற்று நிற்றல் என்பது இதன் பொருள்.

**61. தூநிழல்ஆர் தற்(கு)ஆரும் சொல்லார் தொகும் இதுபோல்
தான்அதுவாய் நிற்கும் தரம்.**

வெயிலில் வருந்தும் ஒருவன் நிழலைக் கண்டவுடன் தானாகவே சென்று நிழலை அடைவான். அதுபோல மலங்களால் துன்பப்படும் உயிர்கள் தாம் துன்பப்படுகிறோம் என்பதை உணர்ந்தவுடன் தாமாகவே அவை இன்பம் தரும் திருவருளோடு கலந்து இன்புறும்.

வெயிலின் கொடுமையை உணர்ந்தவன் நிழலைக் கண்டதும் யாரும் சொல்லாமலே தானே நிழலையடைந்து இன்புறுவது போல, மலப்பிணிப்பால் அல்லலுறும் உயிர்கள் அத்துயரின் கொடுமையை உணர்ந்த நிலையில் பிறர் சொல்லாமலே தாமே திருவருளை அடைந்து அதுவே தாமாய் நிற்கும் என்பது இதன் பொருள்.

பிறந்து இறந்து உழலும் உலக வாழ்க்கையில் உவர்ப்பு ஏற்பட்டாலன்றித் திருவருளினை அடைதல் இயலாது. இதனால் அருளை அடைவதற்கு வழி கூறப்பட்டது.

**62. தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும்நாப்
பித்தத்தின் தான்தவிர்ந்த பின்**

ஒருவர்க்குப் பித்த நோய் இருக்கும் பொழுது அவர் நாக்கிற்குத் தித்திக்கின்ற பாலும் கசப்பாகவே இருக்கும். பித்த நோய் நீங்கியதும் நாவிற்கு முன்பு கசப்பாக இருந்த பால் இப்போது தித்திப்பது தெரியும்.

அதைப்போலவே உயிருக்கு உலகமயக்கம் என்னும் மலநோய் இருக்கும் பொழுது அருளின்பம் வெறுப்பாயிருக்கும். மலபரிபாகம் வந்தபோது உயிர்மயக்கம் தீர்ந்தவிடத்து அருளின்பம் இனிக்கும் என்பதாம்.

இக்குறட்பா பிறிது மொழிதல் அணி அல்லது ஒட்டணி என்னும் அலங்கார வகையைச் சார்ந்தது.

இறைவனின் திருவருள் பாலோடும், ஆணவ மலம் பித்தத்தோடும், உயிர் நாவோடும் உவமிக்கப்பட்டுள்ளன.

உயிர்களிடம் மலம் மேலிட்டால் சிவானுபவம் தோன்றாது. மலம் நீங்கினால் உடன் சிவானுபவம் கைகூடும் என்பது இதன்வழி உணர்த்தப்பட்டது.

### 63. காண்பான் ஒளிஇருளில் காட்டிடவும் தான்கண்ட வீண்பாவம் எந்நாள் விழும்?

அறிவிக்க அறியும் இயல்புடையது உயிர். அது மலத்தால் கட்டுண்டு மயங்கிக்கிடக்கின்றது. ஒளிவடிவாகிய திருவருள் உயிரின் அறியாமையை அகற்றி அறிவை விளங்க வைக்கின்றது. இப்படித் திருவருள் காட்டக் காண்கிறது உயிர். ஆனால் திருவருள் தன்னைக் காட்டிட, அதனைக் காணும் உயிர் தானே அத்திருவருளைக் கண்டதாக நினைக்கும். செருக்கால் வரும் இந்த நினைப்பு வீண்பாவம். இப்பெரும் பாவம் எந்த நாள் நீங்கும்? என்பது இதன் பொருள்.

திருவருள் தன்னைக் காட்ட உயிர்காண்கின்றது. தானே அதனைக் கண்டதாக நினைத்தல் பெரும் பாவம். திருவருளையே கண்ணாகக் கொண்டு உயிர்காண வேண்டுமேயன்றி, அகந்தை மேலிட்டுத் தானே கண்டதாக எண்ணுதல் தீவினையைப் பெருக்கும் என்பது இதன் வழி உணர்த்தப்பட்டது.

### 64. ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை தெளிவு தெளியார் செயல்.

குருடருக்கு வெளிச்சமும் இருட்டும் இரண்டும் ஒன்று தான். அவர்களால் வெளிச்சத்தின் மேன்மையையோ, இருட்டின் கீழ்மையையோ அறிய இயலாது. அதுபோலப் பதி, பசு பாசமாகிய பன்மையின் உண்மையை அறியாதவர்களுக்குப் பதியின் மேன்மையோ, பாசத்தின் கீழ்மையோ விளங்காது. அவர்களுக்கு அனைத்தும் ஒன்றே என்பது இதன் பொருள். மேலும் இதற்கு வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம்.

ஒளியாகிய திருவருளும், இருளாகிய ஆணவமலமும் ஒரு வகையில் ஒத்துள்ளன. எவ்வகையில் என்றால், திருவருள் உயிருக்குச் சிவத்தைக் காட்டி உலகை மறைக்கும். இதற்கு எதிர்மறையாக, ஆணவமலம் உலகைக் காட்டி காண வேண்டிய சிவத்தை உயிருக்குக் காட்டாது மறைக்கும். இவ்வகையில் திருவருளும், ஆணவமலமும் ஒருதன்மையன என்று கொள்வதும் பொருத்தமே.

அருளோடு கூடி நிற்றல் ஒருவகையில் இருளோடு கூடி நிற்றலை ஒத்துள்ளது என்பது இதன் மூலம் விளங்குகின்றது.

ஒளி மிகுதியாக இருக்கும் பொழுது அதுவும் மற்ற பொருள்களை மறைத்து தன்னை மட்டும் காட்டும். இருள் மிகுந்திருக்கும் பொழுது வேறு பொருள் எதனையும் காட்டாது தன்னை மட்டுமே காட்டும். எனவே மிகுந்த ஒளியில் உள்ளவர்க்கும் மிகுந்த இருளில் உள்ளவர்க்கும் பன்மை தெரியாது. குறைந்த ஒளியோ, குறைந்த இருளோ பன்மையைக் காட்டும்.

கேவல நிலையில் உள்ள உயிர்களுக்கும், சுத்தநிலையில் உள்ள உயிர்களுக்கும் பன்மை தோன்றாது. சகல நிலையில் உள்ளவர்களுக்கே பன்மை தோன்றும். இக்குறள் ஒட்டணி அல்லது பிறிது மொழிதல் அணி வகையைச் சார்ந்தது.

### 65. கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க்(கு) அல்லால்
### எடுத்துச் சுமப்பானை இன்று.

'நற்கேண்மை' அருளாகும் கேண்மை. அருளாகும் கேண்மையுடைய இறைவனோடு நல் தோழமையைப் பெறுதல் கிடைத்தற்கரிய பேறாகும். அது கிடைக்கத்தகுமோ? அந்தத் தோழமை, நேசம் கிடைத்து விட்டால், 'எடுத்துச் சுமப்பான்' எதை? தன் தோழமையை, நேசத்தைப் பெற்றுவிட்ட உயிர்களின் வினையாகிய பாரத்தையெல்லாம் இறைவனே எடுத்துச் சுமப்பான் என்பது இதன் பொருள்.

அருளாகிய நட்பு, உயிர்கள் ஈட்டிய ஆகாமிய, பிராரப்த வினைகள் அவ்வுயிர்களை அணுகாமல் செய்யும். உயிர்களுக்குப் பாரமாகிய இவற்றை எடுத்துச் சுமத்தல் என்பது, திருவருளைச் சார்ந்தவர்களுக்கு வினைகளையும், பயன்களையும் சுமப்பவனாகிய இறைவன் எளிதில் தோன்றுவான் என்பதாம்.

எனவே, திருவருளின் வழி நின்றார்க்கு வினைத் துன்பங்கள் இல்லை என்பது இதன் பொருள்.

### 66. வஞ்சமுடன் ஒருவன் வைத்த நிதிகவரத் துஞ்சினனோ போயினனோ சொல்.

ஒருவனுடைய செல்வத்தை மற்றொருவன் வஞ்சமுடன், தெரியாமல் கவர வேண்டுமாயின் ஒன்று அச்செல்வத்திற்கு உரியவன் தூங்க வேண்டும். அல்லது அச்செல்வத்தை வைத்துவிட்டு வேறு எங்காவது போயிருக்க வேண்டும். இவ்வாறு இல்லையென்றால் அச்செல்வத்தைக் கவரஇயலாது.

அதுபோல சிவஞானமாகிய பொருளை உயிர் வஞ்ச முடன் தானே கவர இயலாது.

இறைவன் உயிர்களின் உள்ளத்தில் நீங்காது உறைகிறான். அப்பேரின்பப்பெரும் செல்வத்தைத் திருவருளின் துணையாலன்றி உயிர்கள் தாமே பெற இயலாது. நிதி பேரின்பத்துக்கும், நிதியுடையோன் இறைவனுக்கும், வஞ்சமுடன் கவருவோன் திருவருளைச் சாராது பேரின்பம் பெற முயலும் உயிருக்கும் உவமைகள் ஆகும்.

### 67. தனக்கு நிழல்இன்றாம் ஒளிகவரும் தம்பம் எனக்கவர நில்லா(து) இருள்.

கண்ணாடித்தூண் ஒளி ஊடுருவும் இயல்புடையது. அதனால் அது ஒளிகவரும் தம்பம் எனப்பட்டது. அவ்வாறு ஒளியைக் கவரும் தம்பம் தன்னுள் ஊடுருவும் ஒளியின் நிறத்தினையே கொள்ளும். தனக்கென நிறம் தனியே கொள்ளாதது.

அதுபோல தன்னறிவு தோன்றப்பெறாமல், பேதமின்றி நிற்கும் வண்ணம் உயிர், திருவருளைக் கவர்ந்து கொள்ளப் படுமாயின் அந்நிலையிலேயே உயிர் மலநீக்கம் பெறும்.

கண்ணாடிக் கம்பம், இருளில் இருளாகியும், ஒளியில் ஒளியாகியும் இருக்கும் இயல்பினது. அதுபோல உயிரும் ஆணவ மலத்துடன் நிற்கும் போது அறிவு சிறிதும் விளங்காது அறியாமையாக நிற்கும். திருவருள் தோன்றச் சிவனுணர்வை உயிர் முற்றாகக் கவர்ந்து கொள்ளும் போது அது சிவமயமாகவே ஆகிவிடும் என்பது இதன் கருத்து.

### 68. உற்கைதரும் பொற்கை உடையவர்போல் உண்மைப்பின் நிற்க அருளார் நிலை.

அழகிய உள்ளங்கையில் விளக்கை வைத்து அதனை முன்னிட்டுக் கொண்டு பொருள்களைப் பார்க்கின்றவர்களைப் போல உயிர்களும் திருவருளை முன்னிட்டுக் கொண்டு அதன் பின் நின்று சிவனைக்காண வேண்டும் என்பது இதன் பொருள்.

இருட்டில் ஒரு பொருளைக் காண வேண்டுமெனின் விளக்கைத் தனக்கு முன் பிடித்து, தான் விளக்கின் பின் நின்று பார்த்தால் அப்பொருள் தெரியும். விளக்கைத் தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டு காண முற்பட்டால் பொருளைக் காண இயலாது.

அதேபோல், திருவருளைப் பின்னிட்டுத் தன்னறிவால் சிவனைக் காண முற்படின் உயிர்கள் இறைவனைக் காண முடியாது. எனவே இறைவனைக் காண வேண்டின், திருவருளை முன்னிட்டுத் தற்போதம் அடங்கி அவனருளே கண்ணாகக் கொண்டு அவனைக் காண வேண்டும்.

திருவருளோடு பொருந்தி நிற்கும் உபாயம் இதனால் கூறப்பட்டது.

## 69. ஐம்புலனால் தாம்கண்ட(து) என்றால் அதுவொழிய ஐம்புலன்ஆர் தாம்ஆர் அதற்கு.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளினால் உயிர் உலகப் பொருள்களை அறிகின்றது. தனித்து ஐம்பொறிகளோ, அல்லது உயிரோ எதனையும் அறியாது. இப்படியிருக்க, திருவருளின் துணையின்றி இறைவனை அடைய ஐம்பொறிகளுக்குத்தான் என்ன ஆற்றல் உள்ளது? உயிர்தான் என்ன ஆற்றல் பெற்றுள்ளது? ஒன்றுமில்லை என்பதாம்.

ஐம்புலனும், உயிரும் தாமே சிவத்தை அறியமாட்டா. சிவத்தைத் திருவருள் வாயிலாக மட்டுமே அறிய முடியும் என்னும் உண்மை இதனால் பெறப்பட்டது.

## 70. தாமே தரும்அவரைத் தம்வலியினால் கருதல் ஆமே இவன்ஆர் அதற்கு?

தன்னைத் தானே தருபவன் இறைவன். சிவபெருமான் தானே தன்னைத் தன் திருவருள் வாயிலாகத் தரும் தண்ணளி இயல்பினன். அப்படியிருக்க உயிர் தன்னாற்றலால் தானே சிவனைக் கண்டு பேரின்பத்தைப் பெறலாமென்று எண்ணுவது தவறு. அப்படி நினைக்க உயிருக்கு எந்தத் தகுதியும் இல்லை.

உயிர் இறையின்பத்தைத் தன் ஆற்றலாலே பெறும் தகுதி தனக்கு இருப்பதாக நினைப்பது மிகவும் பேதைமையாகும்.

இதனையே ஆசிரியர் 'இவன்ஆர்' எனச் சினத்தோடு வினவுகிறார்.

மேற்கூறிய இரண்டு குறள்களும் பேரின்பத்தைத் திருவருளின் துணையின்றி உயிர்கள் கரணங்களோடு கூடியோ, தனித்தோ அடைய இயலாது என்பதைத் தெளிவு படுத்தின.

## 8. இன்புறு நிலை

ஆன்ம சுத்தி அடைந்தபின் உயிர்கள் பேரின்பம் பெற்று இன்புறும் நிலையினை எடுத்துக் கூறுவதால் எட்டாம் அதிகாரமாகிய இவ்வதிகாரத்திற்கு இன்புறுநிலை என்று பெயர் தரப்பட்டுள்ளது.

**71. இன்புறுவார் துன்பறுவார் இருளில் எழும்சுடரின்**
**பின்புகுவார் முன்புகுவார் பின்.**

ஆணவ இருளை நீக்க எழும் சுடராகிய திருவருளின் ஒளியை முன்னிட்டு அதன் பின் செல்கிறவர்கள் இன்புறுவார், பேரின்பம் பெறுவர். விளக்கை முன்னே கொண்டு பின்னே செல்பவர்கள் இன்பத்தைப் பெறுவது போல் அருளின் பின்னே செல்பவர்கள் பேரின்பத்தைப் பெறுவர்.

விளக்கைப் பின்னால் வைத்துக் கொண்டு இருட்டில் முன்னே செல்லுகிறவர்கள் பொருள்கள் தெரியாமல் துன்புறுவர். அதைப்போலத் திருவருளைப் பின்னாக்கித் தான் முன் செல்வாராகில் துன்பம் அடைவர் என்பது இதன் பொருள்.

**72. இருவர் மடைந்தையருக்கு என்பயன்இன்பு உண்டாம்**
**ஒருவன் ஒருத்தி உறின்.**

இரண்டு பெண்கள் தம்முள் கூடின் என்னபயன், ஒன்றும் இல்லை. ஒருவனும் ஒருத்தியும் கூடின் இன்பம் உண்டாகும். இங்கு 'இருவர் மடந்தையர்' என்றது, ஒன்று திருவருள், மற்றொன்று உயிர்.

உயிராகிய நாயகி திருவருளாகிய சக்தியோடு மட்டும் சேர்ந்தால் பயன் இல்லை. திருவருளின் துணை கொண்டு உயிராகிய நாயகி 'ஒருவன்' சிவன், நாயகனாகிய சிவனோடு கூடினால் பேரின்பம் கிட்டும் என்பது பொருள்.

கரையை அடையத் தெப்பம் உதவுவது போல் சிவனை அடையத் திருவருள் துணை. இது ஒட்டணியின் பாற் படும்.

உயிர் திருவருளைப் பெற்றால் மட்டும் பயனில்லை. அது சிவத்தையடைய வேண்டும். அதுவே பேரின்பம். இதனால் உயிர் பேரின்பம் எய்தும் நிலை இது என உணர்த்தப்பட்டது.

## 73. இன்பதனை எய்துவார்க்கீயும் அவர்க்(கு) உருவம் இன்பகனம் ஆதலினால் இல்.

இறைவன் தன்னை வந்து பொருந்துகின்ற, தன்னிடம் வருகின்ற உயிர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவன். இறைவனது திருமேனி ஆனந்த வடிவம், இன்பகனம். ஆகையினால் அவனைச் சாரும் உயிர்கள் அவனுக்கு இன்பத்தைக் கொடுக்க வேண்டிய தில்லை. அவனே ஆனந்த வடிவம், 'இன்பகனம்' . ஆகவே அவன் தன்னைத் தானே நுகர்வதும் கிடையாது.

உயிர்களுக்கு இன்பத்தைத் தரும் இறைவன். அவற்றிற்கு இன்பத்தைத் தருவதன்றித் தானே அதனை நுகரான் என்பது இதன் பொருள்.

## 74. தாடலைபோல் கூடிஅவை தான்நிகழா வேற்(று) இன்பக் கூடலைநீ ஏகம்எனக் கொள்.

தாள் + தலை = தாடலை. தாள் என்ற சொல்லும், தலை என்ற சொல்லும் சேர்ந்து 'தாடலை' என்னும் சொல் உண்டாயிற்று. அதுபோல உயிரும் இறைவனும் பிரிப்பின்றிச் சேர்ந்த அப்பேரின்பக் கலப்பே அத்துவிதம் எனக் கொள்ள வேண்டும் என்பது இதன் கருத்து.

அத்துவிதம் என்றால் 'இரண்டல்லாதது' என்பது பொருள். இரண்டல்லாதது என்றால் இரண்டு பொருள்கள் வேறு வேறு பிரிந்து நில்லா என்பது கருத்து. எனவே இரண்டல்லாதது என்றால் பிரிப்பின்றி கலந்து இருப்பினும் பொருள் ஒன்றல்ல என்பது பொருள். முத்தியில் ஆணவத் தன்மை கெட்டு உயிர் நிற்பதால் ஒன்றாய்த் தோன்றும்.

பேரின்ப நிலையாகிய வீட்டின்ப நிலையில் இறைவன் தலைவனாகவும், உயிர் அடிமையாகவும் நிற்பதன்றி உயிரே சிவனாய் மாறுவதில்லை. இறைவனின் தாளில் உயிரின் தலை பொருந்தி நிற்பதையே பேரின்பம் என்கிறோம்.

முத்தியில் இறைவனும் உயிரும் இணைந்திருக்கும் நிலை ஒன்றாதல் போல இருந்தாலும் அவை ஒன்றல்ல என்பதை 'ஏகம்' எனச் சொல்லி ஆசிரியர் விளக்குகிறார்.

### 75. ஒன்றாலும் ஒன்றா(து) இரண்டாலும் ஓசைஎழா(து) என்றால்ஒன்(று) அன்றுஇரண்டும் இல்.

இறைவனும் உயிரும் ஒரே பொருள் எனக்கொண்டால் முத்தியில் அவை ஒன்றாக வேண்டியதில்லை. (பேரின்பத்தை அளிப்பவனும் இல்லை, அதைப் பெறுபவனும் இல்லை). இறைவனும் உயிரும் இருவேறுபட்ட பொருள்கள் என்று சொன்னால் பேரின்பம் உண்டாகாது. எனவே இறைவனும், உயிரும் ஒரே பொருளுமல்ல, ஒன்றாகாத இரண்டு பொருளும் அல்ல என்பது இதன் கருத்து.

இறைவனும் உயிரும் 'ஏகம்' என்று சொல்பவர்களையும், இறைவனும் உயிரும் இரண்டு என்று சொல்பவர்களையும் மறுத்து இறைவனும் உயிரும் ஏகமும் அற்ற, இரண்டும் அற்ற இருபொருள் பிரிப்பின்றி உடனாகின்ற அத்துவிதம் என்பது இதன் மூலம் விளக்கப்பட்டது.

இந்த ஏகமும் அற்ற, இரண்டும் அற்ற அத்துவித நிலையை 'நாவும்தேனும்', 'நெற்றியிற்குத்தும் பச்சை' மற்றும் 'சூரிய ஒளியில் கண்ணொளி' ஆகிய உவமைகள் மூலம் விளக்குவது மரபு.

தேனும், நாக்கும் ஒன்றே என்றால் அவை பிரிந்து கூட வேண்டியதில்லை. அவை இரண்டும் சேராது வெவ்வேறாகவே இருக்குமெனில் நாவானது தேனின் சுவையைச் சுவைக்கஇயலாது. ஆனால் நாவில் தேன் சேரும்போது சுவை தெரிகிறது. அதுபோல இறைவனும் உயிரும் கலப்பால் பிரிக்கக்கூடாத ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாகவும் இருக்கும்.

ஒருவர் நெற்றியிற் குத்திக் கொள்ளும் பச்சைப் பொட்டும் பிரிக்கப்படாத கலப்பால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாகவும் இருப்பது போல் தான் இறையும் உயிரும்.

இங்கு அத்துவிதமாய் இருத்தல் என்பது கலப்பால் அந்நியமற்று ஒன்றாய் இருத்தல் என்பதாம்.

### 76. உற்றாரும் பெற்றாரும் ஓவாது உரை[illegible] பெற்றாரும் அற்றார் பவர்.

இறைவனோடு இரண்டறக் கலந்து அத்துவித உணர்வில் பொருந்தினவர்களும், அதாவது முத்தியினை அடைந்தவரும்,

நிட்டை கூடித் தெளியப் பெற்றாரும், எல்லாப் பற்றையும் விட்டு இடையறாத மௌன நிலையை அடைந்தவர்களும் பிறப்பினை அற்றவர்கள் என்பது இதன் பொருள்.

வீட்டின்பத்தை அடைபவர்களை இவ்வாறு மூவகையாகக் கருதாமல்

இறைவனைப் பொருந்தின பேர்களும், தெளிவு பெற்றவர்களும் ஆகிய இவர்கள் வாக்கிறந்து நின்று பிறப்பினை அற்றவர்கள் ஆவர் என்றும் பொருள் கொள்வர்.

அந்தப் பொருளை உற்றேன், பொருந்தினேன் என்பவர்களும், இந்தப் பொருளைப் பெற்றேன் என்பவர்களும் அல்லாமல் எப்பொழுதும் பேச்சற்று, பற்றற்ற நிலையில் நிற்பவர்களே நிட்டை பொருந்திய ஞானியர்கள். அவர்களுக்கு பிறப்பிறப்பு இல்லை எனப் பொருள் கொள்பவரும் உண்டு.

'உரை ஒழியப் பற்றார்' என்பது கேட்டல், சிந்தித்தல், தெளிதலாகிய நிலையின் கண் நிற்பவர் எனப் பொருள்.

இக்குறள் வீட்டினை அடைவாரது வகைகளை எடுத்துரைத்தது.

**77. பேய்ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும்
நீஒன்றும் செய்யாது நில்.**

பேய் ஒன்றும் தன்மை - பேய் பிடித்தவனின் தன்மை. இந்தத் தன்மை உனக்கு உண்டாகும் வரை நீ ஒன்றும் செய்யாமல் இருப்பாயாக என்பது இதன் கருத்து.

பேய் பிடித்தவனுக்கு அவனது அறிவும், செயலும் மறந்து, பேயின் அறிவும், செயலுமே இருக்கும். அதுபோல சிவத்தினால் ஆவேசிக்கப்பட்டு, ஈர்க்கப்பட்டு, சிவானுபூதி பெற்று விளங்குவார்க்குத் தம் அறிவும் தம் செயலுமின்றி, சிவஞானமும், சிவன் செயலுமாகவே பெற்று விளங்குவர் என்பது இதன் விளக்கம்.

தன் செயல் அனைத்தும் இறைவன் செயல் என்று ஆகும் வரை யாதொன்றும் செய்யாமல் நிற்க வேண்டும். அதாவது திருவருளின் வழி நிற்க வேண்டும் என்பதாம். ஆன்ம போதம் சற்றும் இல்லாது அசைவற நிற்கும் சமாதிநிலையே உயர்ந்த நிலையெனக் கொள்ள வேண்டும்.

**78. ஒண்பொருட்கண் உற்றார்க்(கு) உறுபயனே அல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போல் காண்.**

இறைவனோடு நேயத்தைப் பெற்றவர்களுக்கு, அதாவது இறைவனை அடைந்தவர்களுக்கு அதனால் வரும் பேரின்பமே உறுபயன். அவர்கள் அந்தப் பேரின்பப் பயன் ஒன்றே நுகர்வர். அவர்கள் கருத்து முழுவதும் அந்தப் பேரின்பத்தின் பக்கமே நிலைத்திருப்பதால் அவர்களிடமிருந்து அநுட்டானங்கள் எனப்படும் சமயச் சடங்குகள் யாவும் உறங்குபவன் கையில் உள்ள பொருள் எவ்வாறு பிடி தளர்ந்து நழுவுகின்றதோ அதைப்போலத் தாமாகவே நழுவிவிடும் என்பதாம்.

இறைவனைப் பொருந்திய அருளாளர்களுக்கு எப்பொழுதும் இறையருளே காணப்படும். சிவபோகத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் அந்நிலையில், தூங்குபவன் பற்றியுள்ள பொருள் பிடி தளர்ந்து தானே நழுவுதல் போல, சமயாசாரங்கள் தாமே விட்டகலும் என்பது இதன் வழி உணர்த்தப்பட்டது.

## 79. மூன்றாய தன்மை அவர்தம்மின் மீ[illegible]முயங்கித் தோன்றாத இன்பம்அ(து)என் செ[illegible].

உயிர், திருவருள், சிவம் ஆகிய இம்மூன்றும் காண்பான், காட்டுவது - காட்சி, காணப்படுவது - காட்சிப் பொருள் உயிரும் சிவமும் பிரிப்பின்றி அத்வைதமாய் நிற்குமிடத்து இம் மூன்று தன்மையும் தோன்றா. பிரிப்பின்றி ஒற்றித்து நின்ற நிலையில் தோன்றுவது பேரின்பம். அப்பேரின்பத்தை எப்படிக் கூறுவது? அப்பேரின்பம் சொல்லொணாத் தன்மையது என்பது இதன் விளக்கம்.

ஒரு பொருளைக் காணும் பொழுது, காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்ற மூன்றும் உண்டு. ஒருவன் பேனாவைக் காணின் அவன் ‘காண்பவன்’ ஆகிறான். அவனால் ‘காணப்படும்’ பொருள் பேனா. அதனைப் பேனா எனக் காண்டல் ‘காட்சி’. இம் மூன்றும் வெவ்வேறாக இருக்கின்றன. ஆனால் உயிர் சிவத்துடன் ஒன்றிய முத்திநிலையில் காண்பானும், காணப்படும் பொருளும், காட்சியும் சிவமேயாகும். தானென்றும், அவனென்றும் பிரித்தறிய இயலாத அத்துவிதக் கலப்பு இது. இதுவே மேலான அனுபூதிநிலை. இந்த அத்துவித நிலை சொல்லொணா இன்பத்தை நல்குவது.

## 80. இன்பில் இனி(து)என்றல் இன்(பு)உண்டேல் இன்(று) உண்டாம்

அன்பு நிலையே அது.

ஒவ்வ :இன்பங்களுக்கெல்லாம் மேலானது, இன்பத்துள் இன்பம், அதுவே பேரின்பம். அப்பேரின்பத்தைப் பெறுதற்குப் பேரார்வம் இன்று உண்டானால் இன்றே அடைந்து விடலாம். அன்புண்டேல் இன்றே அடைந்துவிடலாம். அப்பேரின்பம் அவ்வன்பின் விளைவே. பேரின்பமானது மிக்க அன்பினது நிலையே தனது நிலையாக உடையது என்பது பொருள்.

இறைவன் திருவடியில் ஒருவருக்கு பேரன்பெனும் காதல் பிறக்குமாயின், ஆணவம் நீங்கப் பெற்று அவர் இறைவனின் அடிமையாவார். அவர் திருவருளின் வழி நின்று ஏறுவினை நீங்கி நிற்பார். பற்றற்ற தன்மையதனால் ஊழ்வினையும், மாயையும் நீங்கும். ஆகவே மும்மல நீக்கம் பெற்றவராவார். அவர்தம் காதலன்பும் சிவனும் ஒன்றே. ஆகவே இறவாத அன்பே பேரின்பம். அதுவே சிவம். பேரின்பத்தைப் பெற இடையறாப் பேரன்பு வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

## 9. ஐந்தெழுத்தருள் நிலை

இறைவன் திருவருளால் ஆணவ மலநீக்கம் பெற்ற உயிர்கள் பேரின்பம் பெற்று இன்புறும் நிலை எட்டாம் அதிகாரத்தில் காட்டப்பட்டது.

உயிர்கள் இன்புறும் வாய்ப்புப் பெற்றும் பழைய வாசனையால் மீண்டும் உலகியலில் மூழ்குறாவண்ணம் திருவருளிலேயே உயிர்கள் அழுந்தி நிற்றல் பொருட்டு திருவைந்தெழுத்து ஓதுக என அறிவுறுத்தவே இந்த ஒன்பதாவது அதிகாரமாகிய ஐந்தெழுத்தருள் நிலை இடம் பெற்றுள்ளது.

திருவைந்தெழுத்தை ஓத வேண்டும். அதனை ஓதும் முறை இது. அதன் பொருள் இதுவென இவ்வதிகாரத்தில் விவரிக்கப் பட்டுள்ளது.

ஐவகைப்பட்ட திருவைந்தெழுத்தாகிய அருளினது முறைமை என்றும் இவ்வதிகாரத்திற்குப் பொருள் கூறுவர்.

### 81. அருள்நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின் பொருள்நூல் தெரியப் புகின்.

அருள் நூல் என்பது ஆகமம். ஆரணம் என்பது வேதம். ஆகமங்களும், வேதங்களும், மற்றுமுள்ள ஞான நூல்களும் ஆராய்ந்து பார்க்குமிடத்து அவையாவும் திருவைந்தெழுத்தின் பொருளை விளங்கச் சொல்லும் நூல்களே என்பது இதன் பொருள்.

ஆராய்ந்து பார்ப்பின் ஆகமங்களும் வேதங்களும் மற்ற நூல்களும் திருவைந்தெழுத்தின் பொருளாகிய பதி, பசு, பாசங் களைச் சொல்லும் நூல்களே. எனவே எல்லா நூற்பொருளும் இத் திருவைந்தெழுத்தினுள்ளே அடங்கும் என்பதை இக்குறள் உணர்த்துகின்றது.

**82. இறைசக்தி பாசம் எழில்மாயை ஆவி**
**உறநிற்கும் ஓங்காரத்து உள்.**

இறை-சிவம். சக்தி - திருவருள். பாசம்-மலம்(ஆணவம்). எழில்மாயை-அழகு(பெருமை) பொருந்தியமாயை(திரோதம்). ஆவி- உயிர்.

சிவம், அருள், மலம், திரோதம் எனும் மறைப்பாற்றல், உயிர் ஆகிய இவ்வைந்தும் ஓங்காரம் எனும் பிரணவத்தினுள்ளே பொருந்தி நிற்கும் என்பது இதன் கருத்து.

அ + உ + ம் = ஓம். ஓங்காரம் என்பது பிரணவம்.

'சிவாய நம' திருவைந்தெழுத்து.

சி-இறைவன், வ-சத்தி, ய-உயிர், ந-மறைப்பாற்றல். ம- மலம்.

இதனை மூன்றில் அடக்கிச் 'சிவாய' என்று கூறுவதும் மரபு.

சி-இறைவன்

வ-சத்தி + மறைப்பாற்றல்

ய-உயிர் + மலம்

அதனை மேலும் நுண்மையாக அகர உகர மகர மாகிய ஓங்காரத்தில் காணுதல் சிறப்பு.

சிவா ய நம = திருவைந்தெழுத்து

அ உ ம் = ஓம் - ஓங்காரம்.

இவ்வாறு திருவைந்தெழுத்து ஓங்காரத்துள் அடங்கி நிற்றல் இக் குறளின் மூலம் கூறப்பட்டது.

**83. ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்**
**ஞானநடம் தான்நடுவே நாடு.**

சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தில் திரோதமும்(ந) மலமும்(ம) ஒருபக்கம். சிவமும்(சி), அருளும்(வா) ஒருபக்கம். இவற்றின் நடுவில் உயிர்(ய) உள்ளது.

நடமாகிய கூத்து என்பது உயிர்களை இயக்குவதைக் குறிக்கும்.

பிறவியை அளிக்கும் மறைப்பாற்றலும், மலமும் உயிரினைப் பிணித்திருக்கும் நிலை ஊனநடனம். திரோதமும், மலமும் உயிரினை ஊனினுட்படுத்தி நடத்தும். இது ஊன நடனம்.

அருட் சத்தியானது உயிரைச்சிவத்தோடு சேர்க்கும்போது உயிர் பேரானந்த நடனம் புரிகிறது. இது ஞான நடம்.

பிறப்பில் உழன்று நிற்கும் நிலையை ஊன நடன மென்றும். இறைவனைச் சார்ந்து நிற்கும் முத்திநிலையை ஞான நடனமென்றும் கூறி இவ்விரண்டிற்கும் நடுவேதான் உயிர் உள்ளது. அதை விசாரித்து அறிவாயாக. இதனை விளக்கும் திருவைந்தெழுத்து மந்திரத்தைக் குருவின் துணை கொண்டு அறிந்து கொள்ளுதல் சிறந்தது என்பதை உணர்த்த 'நாடு' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

**84. விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்**
**பெரியவினை தீரப் பெறும்.**

ம-மகரம் – மலம்.

ந-நகரம் - மறைப்பாற்றல் (திரோதம்).

இவை இரண்டும் யகரமாகிய உயிரை மீள விடாதபடி இறுகப் பற்றிச் சிவத்திடம் பொருந்த விடா. உயிர்கள் இப்பிணியாகிய மலவிருள் நீங்கியவுடன்: சிகரமாகிய சிவத்தை அடையும் என்பது இதன் பொருள். வினை என்பது இங்கு பிணி எனக் கொள்ளப்படுகிறது. 'பெரிய வினைதீரப் பெறும்' எனவும் பாடம் கொள்வர்.

திரோதமும் மலமும் உயிரைப் பிறப்பில் அழுத்தும். இது கட்டுநிலை. கட்டு-பெத்தம்.

வனப்பாற்றலாகிய திருவருளின் முயற்சியால் உயிர் இறை வனை அடைந்து பேரின்பம் எய்தும். இது ஒட்டுநிலை. ஒட்டு-முத்தி.

கட்டு, ஒட்டு இரண்டும் திருவைந்தெழுத்திலேயே கூறப் பட்டன.

**85. மாலார் திரோத மலம்முதலாய் மாறுமோ**
**மேல்ஆகி மீளா விடின்.**

சிகர வகரங்களாகிய சிவன், அருள் ஆகிய மேலான இவைகளை முதலில் வைத்து (சிவாய நம என) ஓதாமல் மயக்கத்தைத் தருகின்ற நகர மகரங்களாகிய திரோதாயி மறைப்பாற்றல், மலம் இவைகளை முதலில் வைத்து நமசிவாய என ஓதினால் மும் மலமும் நீங்குமோ? நீங்கா என்பது இதன் கருத்

இக்குறள் திருவைந்தெழுத்து ஓதும் முறையை எடுத்து கூறுகின்றது.

சிவாயநம என்று ஓதும் முறை மலத்தை நீக்கி முத்தியைத்தரவல்லது.

**86. ஆராதி ஆதாரம் அந்தோ அதுமீண்டு**
**பாராது மேல்ஓதும் பற்று**

யாவர்க்கும், யாவைக்கும் சிவனே ஆதாரம். அவனே அனைத்தையும் தாங்கும் நிலைக்களம். அவனை ஆராதனை செய்யவேண்டும்.

அனைத்துக்கும் ஆதாரமான சிவனைக் குறிக்கும் சிகரத்தை முன்வைத்து ஓதும் திருவைந்தெழுத்து முறையினை ஆதாரமாகக் கொள்ளவேண்டும் அதுவே தியானத்துக்கு ஏற்றமுறை. இந்த முறை மீண்டும் உள்ளம் உலகியலின் பாற் செல்லாமல் தடுக்க வல்லது. உயிர் திரோதானம், மலம் இவற்றின் பால் மீன்டும் செல்லாது தடுக்கும். இத்தனைச்சிறப்புடைய சிகரத்தை முன் வைத்து ஓதும் முறையை ஓதாது இருப்பது அந்தோ வருந்தத்தக்கது என்று இரக்கம் தோன்ற ஆசிரியர் கூறுகின்றார்.

**87. சிவம்முதலே ஆமாறு சேருமேல் தீரும்**
**பவம்இதுநீ ஓதும் படி.**

சிகரத்தை முன்வைத்து ஓதினால் பிறவித் துன்பம் நீங்கும். பிறப்பற்ற நிலை எய்த இதுவே முறை என்பதை அறிவாயாக. என்பது இதன் பொருள்.

"சேருமேல்" என்பது 'சிவ' . என்று தொடங்கி'ய'வின் பின்னும் 'சிவ' என்றே தொடரவேண்டும் "சிவயசிவ" என்பதைக்

குறிப்பால் உணர்த்துகின்றது. ஆதலின் இவ்வைந்தெழுத்தில் நகர மகரங்கள் இல்லை.

முத்தியடைய விரும்புவோர் சிவ முதலாகும் முத்தியைந் தெழுத்தையே ஓதவேண்டும் என்பது இதன் கருத்து.

**88. வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றுஅதுவே**
**ஆசுஇல் உருவமும்ஆம் அங்கு.**

வகரமாகிய திருவருள் யகரமாகிய உயிரினைச் சிகரமாகிய சிவத்தை அடையவைத்து, உயிரினை வீட்டின்பமாகிய பேரின்பத்தில் திளைக்கச் செய்யும். அத்திருவருளே சிவத்தின் குற்றமற்ற தூய திருமேனியாகவும் இருப்பது என்பதாம்.

அருளின் தன்மை இதன்மூலம் சிறப்பித்துக் கூறப்பட்டது.

திருவைந்தெழுத்தில் வகரமே அருளைக் குறிப்பது. அதுவே மலநீக்கம் பெற்ற உயிரைச் சிகரமாகிய சிவத்தோடு சேர்ப்பது. அருளைக் கொண்டுதான் இறைவனைக் காணஇயலும். "வாசியருளியதை" எனவும் பாடம் கொள்வர். 'சிவயநம' முதல்படி. "சிவயசிவ" இரண்டாம்படி . 'சிவய' மூன்றாம்படி. இக் குறள் 'சிவய' நிலையை விளக்குகின்றது.

சிலத்தார்க்கு முதற்படி, நோன்பினர்க்கு இரண்டாம்படி, செறிவினர்க்கு மூன்றாம்படி, அறிவினர்க்கு 'சிவசிவ'வும் படிமுறைகளெனக் கூறுவது மரபு.

நமசிவாய என்பது நலமருளும் பொது.

**89. ஆசில்நவா நாப்பண் அடையாது அருளினால்**
**வாசிஇடை நிற்கை வழக்கு.**

உயிர் குற்ற மற்ற திரோதன சக்திக்கும் அருளுக்கும் இடையில் நில்லாமல் அருளுக்கும் சிவத்துக்கும் நடுவில் நிற்பது முறை.

'சிவாயநம' என்பதில் யகரம் உயிர். அது திரோதனம் எனும் நகரத்துக்கும் அருள் எனும் வகரத்துக்கும் நடுவில் நிற்காமல், திருவருளினால் வகரத்துக்கும் சிகரத்துக்கும் நடுவில் நிற்க வேண்டும் இதுவே முறை. அதாவது 'சிவயசிவ' என்று இருக்க வேண்டும்.

இக்குறளில் ஆசிரியர் திருவடிப்பேறெய்திய உயிர் களைக் குறிக்கின்றார். திருவடிப் பேறெய்திய உயிரில் திரோதனம் அடங்கிய நிலையில் இருப்பதால் உயிருக்குக் குற்றம் விளைவிக்காது. எனவே அதைக் குற்ற மற்ற திரோதனம் என்னும் பொருளில் 'ஆசில் ந' எனக் கூறுகிறார்.

**90. எல்லா வகையும் இயம்பும் இவன்அகன்று
நில்லா வகையை நினைந்து.**

உயிர்கள் இறைவனை விட்டு நீங்கி நில்லாத முறையை நினைந்து அதற்குரிய எல்லா வழிகளையும் எல்லா நூல்களும் சொல்லும் என்பதாம்.

உயிர்கள் சிவனின் ஆற்றலாம் திருவருளை விட்டு நீங்கி நில்லாத வகையை நினைந்து அவ் உயிர்கள் சிறப்பான பேரின்பம் எய்தும் வழிகள் அனைத்தையும் நூல்கள் யாவும் ஓதும்.

## 10. அணைந்தோர் தன்மை

இறைவனது திருவருளிலேயே அழுந்தி நிற்கும் சீவன் முத்தர்களே அணைந்தோர் எனப்படுவர். அவர்தம் தன்மையைக் கூறுவதே இந்த பத்தாம் அதிகாரமாகிய அணைந்தோர் தன்மை அதிகாரம். இவ்வதிகாரத்தில் அணைந்தோரின் இயல்பினையும் மேன்மையும் ஆசிரியர் விவரிக்கின்றார்.

**91. ஓங்(கு)உணர்வின் உள்ளொடுங்கி உள்ளத்துள் இன்பு
ஒடுங்கத்
தூங்குவர்மற்(று) ஏ(து)உண்டு சொல்.**

நிட்டை நிலையை அடைந்தோர் மிகுந்த ஞானத்தின்கண் தமது அறிவு, இச்சை, செயல்கள் அடங்கப்பெற்றுத் தம் அறிவினுள் பேரின்பம் அடங்கும்படி ஆனந்தநித்திரையாகிய நிட்டையில் அழுந்தி நிற்பர். இதைவிட மேலான வேறு பேறு உண்டோ? சொல். இதைவிட மேலான பேறு வேறில்லை என்பதாம்.

தூங்குதல் என்பது சிவனையே நினைத்து வேறனுபவம் ஏதுமின்றிச் சிவமாந்தன்மை பெற்றுச் சும்மா இருத்தல். இந்நிலை எய்திய ஞானியருக்குச் சொல் என்பது ஏது? மௌனமே அவர்களுக்கு உரியது. இதனையே தூங்கல்-தூங்கும் நிலை என்பர்.

எனவே சிவனருளில் தோய்ந்து ஆனந்த நிட்டையில் ஆழ்ந்திருக்கும் ஞானியர் மௌனமே மொழியாய் இன்புற்றிருப்பர்.

92. ஐந்தொழிலும் காரணர்களாம் தொழிலும் போகம்நுகர்
வெந்தொழிலும் மேவார் மிக.

இறைவனால் செய்யப்படும் படைப்பு, நிலை, ஈறு, மறைப்பு, அருளல் என்னும் ஐந்து தொழில்களையேனும் அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகியோர் ஆற்றும் தொழில்களையேனும், போகத்தைத் தரும் உலகியற் பொருள்களை நுகர்தற்கான கொடுந்தொழில்களையேனும், அந்த ஞானியர்கள் செய்யார்.

உயிர் இறைவன் தொழில்களுக்கு உரியதன்று. மலநீக்கம் பெற்று இன்புறுவதற்கே உயிர் உரிமையுடையது.

சீவன் முத்தராம் ஞானியர் சிவத்தோடு கலந்து சிவானுபவமாம் பேரின்பத்தைத் துய்ப்பதன்றி வேறு தொழில்கள் எவற்றையும் செய்யார் என்பது இதன் பொருள்.

93. எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்(கு)இவர்ஒன்று
அல்லாது அறியார் அற.

சீவன் முத்தர்கள் எல்லாவற்றையும் அறியும் அறிவைப் பெற்றிருப்பினும் அவர்கள் சிவனையன்றி வேறொன்றையும் அறியச் செய்யார்கள்.

சிவன் எல்லாம் அறிந்தவன். இயற்கையுணர்வும் முற்றுணர்வும் இயல்பென உடையவன். அவன் திருவடிகளைச் சேர்ந்தார்க்கும் அவை பதியும். ஆயினும் எல்லா ஆற்றல்களையும் பெற்றிருக்கினும் சீவன் முத்தர் தம் சிந்தையைத் திருவடியின்பத்தை நுகர்வதில் செலுத்துவரேயன்றி வேறு எதனையும் எண்ணவும் மாட்டார்.

சீவன் முத்தர் வேறுஎதனையும் அறியாது எங்கும் சிவமே கண்டிருப்பர் என்பது கூறப்பட்டது.

94. புலனடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்
தலம்நடக்கும் ஆமை தக.

சிவன் முத்தர் உலகப் பொருள்களின்பால் செல்லவிடாமல் தம் புலன்களை அடக்கி இமைக்கு முதலாகிய முதன்மையாகிய சிவத்திநுட்புக்கு நிற்பர். அது எதுபோல் எனின் நிலத்தில் செல்லும் ஆமையானது தனக்கு இடர் வருவதை அறிந்த உடனே தன் அவயவங்களையெல்லாம் தன் ஓட்டினுள் இழுத்துக்கொண்டு அசைவற்றுக் கிடப்பதைப் போன்று என்பதாம்.

சிவன் முத்தர் புலன் உணர்வுக்கு அஞ்சியும் இறையருளுக்குள் அடங்கியும் ஒழுகுபவர் என்பதாம்.

## 95. அவனைஅகன்(று) எங்(கு)இன்றாம் ஆங்(கு) அவனாம் எங்கும் இவனையொழிந்(து) உண்டாதல் இல்.

எவ்விடத்தும் விட்டு நீங்காமல் எங்கும் பரிபூரணமாய் இறைவன் நிற்கிறான். ஆகையினால் உயிர் சிவனை அகன்று நிற்பதில்லை. முத்திநிலையிலும் சிவன் அத்துவிதமாய் நின்று உயிரினைப் பிரியாமல் நிற்கிறான். எங்கும் நிறைந்த இறைவனை விட்டு உயிர்கள் நீங்கி நில்லாதன. சிவன் முத்தர் இறைவனது வியாபகத்தே கலந்திடுவர். முத்திநிலையில் வியாபகத்தில் இறைவனோடு ஒத்திருப்பர் சிவன் முத்தர். எனவே சிவன் முத்தர் சிற்றறிவு நீங்கிப் பேறறிவுடையோர் என்பதாம்.

## 96. உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்(கு) எள்ளும் திறம்ஏதும் இல்.

அகமும் புறமும் ஒரேதன்மையாகக் காணும் நிலையை அடைந்தவர்க்கு எதனையும் இகழும் தன்மை இருக்காது.

இந்நிலை எய்திய ஞானியருக்கு எல்லாம் சிவமாகவே தோன்றும் என்பது இதன் பொருள்.

மேலும் இதற்கு வேறு வகையாகவும் பொருள்கூறலாம். உள்ளும் புறமும் என்பதை உயிருக்குயிராக உள்ள இறையருளும்; அதுவே தானே புறத்தே குருவாக எழுந்தருளி வந்ததென்றும் இவ்விரண்டையும் ஒரு தன்மையாய்க் காண்கின்ற ஞானியருக்கு விருப்பு வெறுப்பு எனும் வேறுபட்ட தன்மைகள் இரா எனவும் பொருள் கொள்ளப் பொருந்துவதே. எப்பொழுதும் ஒருதன்மை யினராகவே இருப்பர் இந் ஞானநிலை எய்தியோர். அவருக்கு அகத்தும் புறத்தும் சிவபெருமானே காட்சியளிப்பான்.

எல்லாப்பொருளும் அவன் வண்ணமாகவே காணப்பெறும் என்பது இதன் கருத்து.

97. உறும்தொழிற்குத் தக்கபயன் உலகம் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

உறுந்தொழில் - பற்றோடு பொருந்தும் செயல். யான் எனது என்னும் செருக்கோடு செய்யும்செயல்.

வறுந்தொழில் - செருக்கின்றிப் பற்றற்று செய்யும் செயல்; இறைபணி.

யான் எனது எனும் செருக்கோடு செய்யும் செயல்களுக்கெல்லாம் தக்க பயன் நிலையாத உலகின்பம். யான் என்னும் செருக்கும் செயலின் பயன் மீது பற்றும் இன்றி திருவருளின் வழிநின்றுச் செய்யும் செயல்கள் பேரின்பமாகிய முத்தியைத்தரும் என்பதாம்.

உறுந்தொழில் என்பதைச் சரியை கிரியை போன்ற காமியம் கருதிச்செய்யும் செயல் எனவும் கூறுவர். உலகம் என்பது பதமுத்தியினையும், வாய்மை என்பது சிவத்தையும் குறிக்கும் என்றும் கூறுவர்.

திருவருள் கைவரப் பெற்றார் செய்யும் செயல்கள் திருவருட்செயல்கள். செய்பவர் - கருவி; செய்விப்பது- திருவருள். அவர் எதைச் செய்யினும் சிவானுபவத்திலேயே திளைத் திருப்பர். அவர்கள் செய்யும் செயல்களின் பயன்கள் (வினைகள்) அவர்களை அணுகா.

98. ஏன்ற வினைஉடலோ(டு) ஏகும்இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்.

அணைந்தார்க்கு அவர் எடுத்த உடம்பால் முகந்து நின்ற வினை அவ்வுடலோடு கழியும். இவ்வினையை அனுபவிக்கும் பொழுதே புதியவினைகள் ஏறும்வினை தோன்றின் அதனைத் திருவருளே சுட்டழித்துவிடும் என்பதாம்.

உயிர்களால் ஈட்டப்பட்ட வினைகளுள் உடம்பால் முகந்து நின்றவினையைப் 'பிரார்த்தம்' என்பர் 'ஏன்றவினை' என்று ஆசிரியர் கூறுவது உடம்பு ஏற்ற வினையாகிய பிராரத்தையே. அது உடலூழாய்க்கழியும். இந்த வினையை

அனுபவிக்கும் பொழுது தோன்றும் வினையே 'ஏறும்வினை' என்றார் ஆசிரியர். இந்த ஏறும்வினை 'ஆகாமிய'வினை. இதனைத் திருவருள் அழிக்கும் என்றார். பிராரத்தவினையும் ஆகாமியவினையும் கூறியதிலிருந்து சஞ்சிதவினை தீக்கையால் கெட்டொழியும் எனக் குறிப்பால் உணரலாம். எனவே அணைந்தார்க்கு வினைத்தொடர்பு இல்லை. ஆகவே பிறப்பும் இல்லை என்பதாம்.

## 99. மும்மை தரும்வினைகள் மூளாவாம் மூதுஅறிவார்க்(கு) அம்மையும் இம்மையே ஆம்.

மனம் வாக்குக் காயத்தால் செய்யும் வினைகள் மூதறிவார் ஆகிய அணைந்தாரைச் சாரா. அவர்கள் வீட்டின்பத்தையும் இம்மையிலேயே பெறுவர் என்பதாம்.

மும்மை என்பது இம்மை, மறுமை, அம்மை என்னும் மூவகைப் பயன்களாம். வினையென்றும் பொருள்கொள்வர். அம்மை-முத்தியின்பம்.

அணைந்தார்க்குப் பரமுத்தி அனுபவம் இம்மையிலே உண்டு. திருவடியுணர்வு கைவந்தோர் இந்த உலகத்திலேயே இவ்வுடம்போடு கூடிய பேரின்பம் நுகர்ந்திருப்பர். அவர்களைப் பற்றிய மலங்கள் நீங்கியதால் அது தொடர்பாக வந்த வினைமாயைகளும் நீங்குவதாகின்றன.

## 100. கள்ளத் தலைவர் துயர்கருதித் தம்கருணை வெள்ளத்(து) அலைவர் மிக.

கள்ளத் தலைவர் - கட்டுண்ட உயிர்கள். புலன் வழித்திரியும் யான், எனது என்னும் பொய்யான தலைமையி னையுடைய பெத்த உயிர்கள். இவ்வுயிர்கள் படுகின்ற துன்பத்தைப் பார்த்து அணைந்தோர் தம்மிடத்து எழுந்த கருணை யாகிய கடலில் இரக்கத்தால் தளர்வர்.

உயிர்கள் படும் துன்பம் கண்டு மிகவும் வருந்துவர் ஞானியர் என்பதாம்.

அணைந்தோரும் இறைவனைப் போன்றே உயிர்கள்பால் அளவற்ற கருணையை உடையவர்கள் என்பது இதன் மூலம் விளங்குகின்றது.

கள்ளத்தலைவர் என்பது இகழுரை.

சிவபெருமான் இம்மெய்யடியார்களின் வாயிலாகக் கட்டுண்ட உயிர்கட்கெல்லாம் நல்லுணர்வை ஊட்டி நன்னெறியைக்காட்டுபவன்.

திருமாமன்ற முறைகளையும் மற்றுமுள்ள ஞான நூல்களையும் இஞ் ஞானியர் வழி ஓதுவித்து உயிர்களுக்கு அவற்றின் பொருள் உணர்த்தி அருள் புரிவான்.

பேரிரக்கம் கொண்டவன் இறைவன். அவன் பொன்னடிகளைச் சார்ந்ததனால் அணைந்தோரும் இரக்கத்தில் தலைநின்றவராயினர். ஆருயிர்களின் ஈடேற்றத்திற்கு அணைந் தோர் இன்றியமையாதவர்கள். இவர்கள் சிவன் போலவே அருளுள்ளம் பூண்டவர்கள்.

திருச்சிற்றம்பலம்